| | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு |
| பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. | : *290* |

**பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை சம்பந்தமாக நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் மாண்புமிகு அமைச்சரின் அவதானிப்புகளையும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

# பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 290

## அரசாங் க கணக்குகள் பற்றிய குழு

<u>உள்ளடக்கம்</u>


| தொடர் இலக்கம். | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1. | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு | 1 |
| 2. | இலங்கை சுங்கம் | 2-8 |
| 3. | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | 9-24 |
| 4. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 25-34 |
| 5. | இலங்கை மதுவரித் திணைக்களம் | 35-48 |
| 6. | அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களம் | 49-55 |
| 7. | பொதுத் தொழில்முயற்சி திணைக்களம் | 56-57 |
| 8. | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 58 |
| 9. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 59-60 |
| 10. | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 61-62 |
| 11. | அரச கணக்குகள் திணைக்களம் | 63 |
| 12. | வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம் | 64 |
| 13. | கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகம் | 65 |
| 14. | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | 66 |
| 15. | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | 67 |
| 16. | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 68 |
| 17. | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 69-70 |
| 18. | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் | 71-72 |
| 19. | தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம் | 73-74 |
| 20. | அரச நிதித் திணைக்களம் | 75 |

திணைக்களத்தின் பெயர் : நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 290

நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

| அறிக்கையில் குறிப்பிடப்படுள்ள செயற்குழுவினால் அடையாளங்காணப்படுள்ள குறைபாடுகள் | நிறுவனத்தினால் குறைபாடுகளைத் திருத்திக்கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலை |
|---|---|
| 2016.12.29 ஆம் திகதிய 2016/30 எனும் இலக்கத்தைக்கொண்டபொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் விரயம் பற்றிய பரிசீலனைகள் செய்யத்தவறியமை. | அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் விரயம் பற்றி பரிசீலனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. |

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 290 இற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

திணைக்களத்தின் பெயர் : இலங்கை சுங்கம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 290

*நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.*

| | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுளை சரிசெய்வதற்காக நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள்/தற்போதைய நிலையை |
|---|---|---|
| முதலாம் பாகம் : 68.00 | | |
| 1 | நிலையான சொத்துக்கள் பதிவேடு கால அடிப்டையில் பராமரிக்கப்பட வில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| 2 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அனுப்பப்படவில்லை | சுங்கத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு இறுதிப் பதில் தயாரிக்கப்படுவதால் சற்று கால தாமதம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. எதிர்காலத்தில் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 3 | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அனுப்பப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்களை சமர்ப்பிக்குமாறு திணைக்களத்தின் அனைத்து பணிப்பகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 4 | 2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க, சொத்துக்களுக்கான முகமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் வி ற்றொழித்தல்கள் பற்றிய தகவல்கள கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை | இலங்கை சுங்கத்தின் வாகனங்கள்அனைத்தினதும் தகவல்கள்கொம்ட்ரோலர் நாயக அலுவலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட NFAMSதரவு அமைப்பில்உள்வழிப்படுத்தப்பட்டு, CGO/NFAMS/V/02 என்ற படிவத்தின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. |
| 5 | 2017.06.26 ஆம் திகதிய, 1/2017 ஆம் இலக்க, சொத்துக்களுக்கான முகமைத்துவ சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம், ஏற்பாடுகள் நடைமுறைப்பபடுத்தப்படுதல் இணைப்பாக்கம் செய்யப்படுவதற்காகபொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துகொம்ட்ரோலர்நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்காமை | கொம்ட்ரோலர்நாயகஅலுவலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட NFAMSதரவு அமைப்பில் இலங்கை சுங்கத்தின் அனைத்து வாகனங்களையும் உள்ளடக்குவதற்காக தரவு உள்வழிப்படுத்தல் மற்றும் இணைபாக்க உத்தயோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 6 | 2020.02.28 ஆம் திகதிய, 01/2020 ஆம் இலக்க, அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ. 756(6) இன் பிரகாரம்பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, குறித்த தினத்தில் | கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட கொரோனா நோய்த் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால்,சுங்கத் திணைக்களத்தில் வருடாந்த பொருள் இறுப்புக் கணிப்பாய்வு குறிப்பிட்ட காலத்தினுள் மேற்கொள்ளமுடியாமற்போயுள்ளது.யாழ்ப்பாணம், |

| | | |
|---|---|---|
| | உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை | திருகோணமலை, அம்பாந்தோட்டை,காலி,நீர்கொழும்பு போன்ற பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள சுங்கத்தின் பிராந்திய அலுவலகங்களில் பொருள் இறுப்புக் கணிப்பாய்வு பணியை மேற்கொள்வதற்கும்,மேலும் அந்த பொருள் இறுப்புக் கணிப்பாய்வு அறிக்கைகளின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கணிசமானளவு காலம் எடுப்பதனால், எதிர்காலத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற பொருள் இறுப்புக் கணிப்பாய்வினை உரிய காலத்தில் நிறைவுசெய்து , உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 7 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க,பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனைமேற்கொள்ளப்படாமை | எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட விநியோக முறை நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக109 வாகனங்களின் எரிபொருள் தகனம் பற்றிய சோதனையினை மேற்கொள்வது சிரமமானதொரு விடயமாக காணப்பட்டது. எரிபொருள் கோட்டா முறையானது 2023 செத்தெம்பர் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக இதுவரை பல வாகனங்களில் எரிபொருள் தகன சோதனை மேற்கொள்ளப்பட்டுளது. |
| 8 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டு வந்த செயற்படாத வங்கி கணக்குகள் தீர்க்கப்படவில்லை | செயற்படாத வங்கி கணக்குகள் காணப்படுவதில்லை |
| 9 | வங்கிக் இணக்க கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்ட, சீராக்கல்செய்யப்படவேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின் படி செயலாற்றி, குறித்த மீதிகள் ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை | வங்கிக் இணக்க கூற்றுகளில்வெளிப்படுத்தப்பட்ட சீராக்கல் செய்யப்பட்டவேண்டிய மீதிகள் தீர்க்கப்பட்டுள்ளன. |
| 10 | நி.ஒ. 94(1) இன்படி செலவு விடயமொன்று க்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பனை விஞ்சாதபடிபொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தது. | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் வரம்பனை விஞ்சிய எந்தப் பொறுப்புக்களும் ஏற்கப்பட்டிருக்க வில்லை. |
| 11 | ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை | இடமாற்றம், மரணம், ஓய்வு பெறல், பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஒரு வருடத்திற்கு மேற்பட்ட 56அலுவலர்களிடமிருந்து அறவிடப்படவேண்டி இருந்த, ரூபா4,215,575.81 தொகையில், 20 அலுவலர்களின் கடன் நிலுவைத் தொகையான ரூ.499,215.01 ஆனது அறவிடப்பட்டு, நி.ஒ.113 இன் பிரகாரம், பதிவழிப்புச்செய்வதற்கும் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 36 அலுவலர்களின் கடன் நிலுவை தொகையான ரூ.3,716,360.80 இனை அறவீடுசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 12 | காலாவதியான வைப்புக்கள்தொடர்பாக நி.ஒ. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.ஒ.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது. |
| 13 | நி.ஒ.341 இன் பிரகாரம், வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை. | பணி குறித்த இடைக்கால கட்டு நிதி பெறப்பட்ட பணி முடிவடைந்தவுடன் அவற்றினைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு கோரி சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 14 | கட்டுநிதி ஒப்பீட்டுக் கூற்றுக்கு அமைய அறிக்கையில் கண்டறியப்பட்டவேறுபாடுகளை அடையாளங் கண்டு சரிசெய்வதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கட்டுநிதி ஒப்பீட்டுக் கூற்றுக்கு முறையாக ஒப்பீடுசெய்யப்பட்டுள்ளது. தீர்க்கப்படாத பணி குறித்த இடைக்கால கட்டு நிதி மீதி காணப்படுவதில்லை. |
| 15 | 1994.4.20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க, அரசாங்க கணக்குச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நிறுவனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை | 30/94 ஆம் இலக்க, அரசாங்க கணக்குச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கணக்குவைக்கப்படவேண்டிய வெளிநாட்டு மானியங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 16 | வெளிநாட்டு மானியமாக பெறப்பட்ட மொத்தப் பணமும் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் உத்தயோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படவில்லை. | வெளிநாட்டு மானியங்கள் பெறப்படாததால்,திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கிற்குஅனுப்பவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. |
| இரண்டாம் பாகம்: 65.00 | | |
| 1 | நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை | நிலபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) பற்றி இலங்கை சுங்கத் திணைக்கள அலுவலர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக 2023 ஆண்டு செத்தெம்பர் மாதம் 7 ஆம் திகதியன்று, நிலபேறான அபிவிருத்திப் பேரவையின்அலுவலர்களின் பங்கேற்புடன் செயலமர்வொன்றும் நடைபெற்றது.<br><br>அதற்கிணங்க, திணைக்கள அலுவலர்கள் சுங்க நடவடிக்கைகளுக்கு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களைப் பயன்படுத்துவது பற்றிய அடிப்படை விளக்கமொன்றினைப் பெற்றுக் கொண்டதோடு,பின்வரும் சுங்க நடவடிக்கைகளுடன் தொடர்புபற்ற நிலையான அபிவிருத்தி நோக்கங்களையும்இனம் கண்டுள்ளனர்.<br><br>1. சுங்க அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வருமான சேகரிப்பு மற்றும் வர்த்தகத்திற்கு வசதியளித்தல் செயற்பாடுகள் மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகள் உள்ளடங்கலாக தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு |

| | | |
|---|---|---|
| | | நிதியளிப்புச் செய்கின்ற தேசிய பொதுத் திறைசேரிக்கு பங்களிப்பு செய்வது,<br>2. வர்த்தகப் பொருட்கள் சுகாதாரம்,பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச்செல்வதனையும், அவ்வாறே, உணவு,மருந்துகள்,நீர் மற்றும் துப்பரவேற்பாட்டுப் பொருட்கள்என்பனவற்றிற்காக வினைத்திறனான வழங்கல் சங்கிலி பேணப்படுவதனை உறுதிசெய்வதற்காகவும்,எல்லைகளில் செயற்படுகின்ற ஏனையமுகவராண்மை நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு,சுங்கம் முக்கிய பணியொன்றினை நிறவேற்றல்.<br>3. இலத்திரனியல்- கற்றல் மற்றும் அறிவுப் பகிர்வுத் தளங்கள் ஊடாக சுங்கத் தொழிற்பயிற்சிக்காக சமமான அணுகலை உறுதிப்படுத்துகையில், நிர்வாகங்கள் நிலபேறானஅபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்காக அறிவு மற்றும் ஆற்றல்களைப் பெற்றுக்கொள்வதற்காகஅலுவலர்களை அறவிவூட்ட முடியுமாக இருத்தல்.<br>4. சுங்க எல்லையில் வர்த்தகத்திற்காக வசதிகளை ஏற்படுத்தி, நிலைமைகளை மேம்படுத்தி, பாதுகாப்பினை உறுதிசெய்து, பெண் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சிறிய அளவிலான வர்த்தகர்கள் உள்ளடங்கலாக விளிம்புநிலைச் சமூகங்களுக்கு புதிய சந்தைகளை அணுகுவதற்கான வாய்ப்புகளைத் திறப்பதற்காக உதவுவதன் மூலம் நுகர்வோருக்கு அதிகரித்த பன்முகத்தன்மையினையும், குறைந்த சமத்துவமின்மையினையும் வழங்க முடியுமாக இருத்தல்.<br>5. எல்லை நடைமுறைகளை இலகுபடுத்தி, தரப்படுத்துவதன் ஊடாக வர்த்தகத்திற்கு வெளிப்டைத்தன்மை மற்றும் எதிர்வுகூறல்தன்மையினைஏற்படுத்துவதன் மூலம், சுங்க நிர்வாகங்கள், சட்ட ரீதியான வர்த்தகத்திற்கு வசதியளித்து, அதனூடாக பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்வாய்ப்புகளை அதிகரித்தல்.<br>6. புலமைச் சொத்துரிமைக்கான(IPR)பாதுகாப்பினை |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கி, புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலுக்கான ஒத்தழைப்பினை வழங்குவதற்காக மூலப்பொருட்களை உரிய நேரத்தில் வழங்குவதற்காக சுங்கத்திற்கு உதவுதல்<br>7. நவீன சுங்க நிர்வாகத்தின் மூலம் கடத்தல் மற்றும் மோசடி என்பவற்றை வெற்றிகமாக கட்டுப்படுத்தி,உள்ளூர் சமூகங்களில் நியாயமற்ற போட்டியைக் குறைத்து,சமூகம் மற்றும் குடிமக்களை தீங்குகளிலிருந்து பாதுகாத்து,பொருளாதார நிலபேற்றுத்தன்மைக்காக வினைத்திறனான முறையில் வருமானத்தினைத் திரட்டி,எல்லைகடந்த வர்த்தகத்திற்காக வசதிகளை வழங்கல்.<br>8. நாட்டு எல்லையில் நுகர்வோர் பண்டங்களை வெளியே எடுத்துச்செல்ல அனுமதிக்கின்ற பொறுப்புவாய்ந்த முகவர் நிறுவனம் என்ற வகையில், சுங்கமானது, அதிக இடர்வுகளை ஏற்படுத்துகின்ற போலியான நுகர்வுப் பண்டங்களை இறக்குமதிசெய்து, நாட்டுச் சந்தைக்கு எடுத்துச்செல்லப்பட முன்னர் கண்டறிவதற்கும்,கைப்பற்றுவதற்கும் முடியும் என்பதனை உறுதிசெய்தல்.<br>9. சுற்றாடல் தர மீறல்கள் மற்றும் அனைத்து வகையான வனவிலங்கு கடத்தல்கள் உள்ளடங்கலாக அனைத்து வகையான சுற்றாடல் குற்றங்களையும் கண்காணித்து, கண்டறிந்து மற்றும் தடுப்பதன் மூலம் சுங்கத்திற்கு குறிப்பிடத்தக்களவில் சுற்றாடல் மாசுடன் தொடர்புபற்ற குற்றங்களைத் தடுத்தல் மற்றும் சுற்றாடலைப் பாதுகாத்தல்.<br>10. அபாயகரமான பண்டங்கள் மற்றும் ஆயுதக் கடத்தலினைத் தடுத்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான தனது அதிகார பலத்தினை பயன்படுத்துவதன் ஊடாக அமைதியைப் பேணி , சுங்கமானது எப்போதும் வலுவான அரச நிறுவனமாக அதன் பயணப் பாதையினை வழிநடாத்துதல்.<br>11. வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் லழிகாட்டல்களைப்பயன்படுத்துவதன் மூலம் விதியினை அடிப்படையாக கொண்ட பன்னாட்டு வர்த்தக முறைமையொன்றிற்கும் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | பொருளாதார மேம்பாட்டிற்கும் பங்களிப்புச்செய்கின்ற அரச மற்றும் தனியார்த் துறை போன்ற இரு துறைகளிலும் பரந்தளவில் காணப்படுகின்ற ஏனைய செயற்பாட்டாளர்களுடன் சுங்கம் தொடர்ந்தும் ஒத்துழைத்தல். |
| 2 | அடையாளங் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அடையவேண்டியுள்ள இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை | 2024-2028 ஆண்டு வரையானகாலப்பகுதிக்காக இலங்கை சுங்கத்தால் தயாரிக்கப்பட்டுள்ள மூலோபாயத் திட்டத்தில்,நிலபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் தொடர்பான சுங்கத்தின்குறிக்கோள்கள், மற்றும் இலக்குகள் முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (KPIகள்) என்பன ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு, எதிர்வரும் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்து வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 3 | அடையாளம் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை. | |
| 4 | பிரசைகள்/சேவைபெறுனர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை | பிரசைகள்/சேவைபெறுனர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு வைக்குமாறு அனைத்து பணிப்பகங்களுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 5 | 2018 ஆம் ஆண்டு சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க, பொதுநிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய முறையான மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | மேற்குறித்த சுற்றறிக்கையின் இலக்கம்05 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நிறுவனத்திற்கு தனித்துவமான வழிமுறையொன்றினை ஆக்கப்பூர்வமாக பின்பற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இத்திணைக்களத்தின் அதிகளவிலான சிக்கலான விடயங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட இந்த மனிதவள அபிவிருத்தித் திட்டம், ஆண்டுதோறும் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.அவ்வாறே, எதிர்காலத்திலும்,மேற்குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு,மனிதவள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்காக என்னால் இயன்றவரை முயற்சிப்பேன் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். |
| 6 | தயாரிக்கப்பட்ட மனித வளமேபாட்டுத் திட்டத்தில் , 50% இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதிசெய்யவில்லை | மீளாய்வு ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தித் திட்டத்திலுள்ள அனைத்து திட்டங்களும் 100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அத்திட்டம்,ஆளணியின் அனைத்து மட்ட பதவியணி அடுக்குகளுக்கும் பரிந்துரைக்கப்பட்ட பயிற்சி மணித்தியாலங்களைப்பெற்றுக்கொள்ளும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சுங்கத் திணைக்களத்தில்அலுவலர்களுக்கு நிலவுகின்றகடுமையான பற்றாக்குறை காரணமாக (அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை 3090 என்றாலும், தற்போதைய எண்ணிக்கை அலுவலர்களின் எண்ணிக்கை 2205), |

| | | |
|---|---|---|
| | | அலுவலர்களைப் பங்கேற்கச் செய்வதிலுள்ள சிரமம் இதனைக் கடுமையாக பாதித்துள்ளது. |
| 7 | ஒட்டமொத்த பணியாட் தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 08/98(1) மற்றும் 08/98/ (11) என்பனவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய,சுங்கத் திணைக்களத்தில் பணிபுரியும் ஒட்டுமொத்த பணியாட்தொகுதிக்குமாகவும் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை பயன்படுத்தப்படுவதோடு, அதற்கமைய,பொதுநிருவாக சுற்றறிக்கை இல. 02/2018 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. 2023.11.30 ஆம் திகதிய,பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018(1) இன் பிரகாரம், வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதானதுமேலும் அவசியப்படாது என்பதனையும்நான் அவதானிக்கறேன். |
| 8 | மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும்கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேட்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துவதற்காக சுங்கத் திணைக்களத்தினுள் மனிதவள அபிவிருத்திப்பணிப்பகம் என விசேடபணிப்பகமொன்று நிறுவப்பட்டு, சுங்கப் பணிப்பாளர் ஒருவரின் செயற்படுகிறது. |
| 9 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | திட்டமிட்ட பயிற்சி வாய்ப்புகளில் 100% ஆனவை செயற்படுத்தப்பட்டுள்ளது. |
| 10 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது | 2021 முதல் இற்றை வரையில் ஒவ்வொரு ஆண்டுக்குமாகவும்,கணக்காய்வாளர் அதிபதியினால் சுங்கத் திணைக்கத்திற்குமுனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை வழங்கியுள்ளது. |
| 11 | நி.ஒ. 119 இன் படிசெலுத்த உத்தரவிடப்பட்ட கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படவில்லை | அறவீடுசெய்யப்படுவதற்காக மேலதிக கட்டணம் ஏதும் காணப்படவில்லை |

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. *290* இற்காக இலங்கை சுங்கம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
சுங்கப் பணிப்பாளர் நாயகம்
இலங்கை சுங்கம்

திணைக்களத்தின் பெயர் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 290

***நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.***

*முதற் பகுதி : 82.00.*

| தொடர் இல | அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சபையினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
|---|---|---|
| *01.* | கணக்காளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வு வினவல்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டிருக்காமை | கணக்காய்வு வினாக்கள் மூலம் கோரப்பட்ட தகவல்களுக்கு உரிய பதில்களை உரிய திகதிக்குள் அளிக்க வேண்டும் என்று ம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன், தற்போது உரிய திகதியில் பதில் அளிக்க முடியாவிட்டால் இடைக்கால பதிலேனம் அனுப்பப்படுகிறது. |
| *02.* | உள்ளக கணக்காய்வு வினவல்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கத் தவறியமை | |
| *03.* | *28.08.2020 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 11.1 இன் காலச்சட்டகத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிதி ஒழுங்குவிதிகள் 756 (6) இன் படி பொருட்பட்டியலினை மீளாய்வு செய்து உரிய அறிக்கைகளை கணக்காளர் நாயகத்திற்கு உரிய தகிதியில் அனுப்பத் தவறியமை.* | *31.12.2021 அன்று முடிவடையும் ஆண்டிற்கான பொருட் பட்டியல் மீளாய்வு 08.06.2022 அன்று முறையாக முடிக்கப்பட்டு, கணக்காய்வாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அகற்றும் பணிகள்16.09.2022 அன்று நடைபெற்றுள்ளது. 03.10.2022 அன்று பொருட்பட்டியல் மீளாய்வு நடவடிக்கைகள் நிறைவுற்றதாக கணக்காய்வாளர் நாயகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.*<br><br>*தற்போது பொருட்பட்டியல் கணக்கெடுப்பு சுற்றறிக்கையின்படி, பொருட்பட்டியல் கணக்கெடுப்பு 31.12.2022 நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு, 09.06.2023 அன்று கணக்காளர் நாயகத்திற்கும், 27.06.2023 அன்று பொது நிதி பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிக்கை அளிக்கப்பட்டது.* |
| *04.* | வருடாந்த பொருட் பட்டியல் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்படுத்தப்படாமை. | அதிகப்படியானவை கணக்கிடப்பட்டு, குறைபாடுகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள்104 இன் பிரகாரம் நிவர்த்தி செய்ய குழுவொன்று நியமிக்கப்பட்டு, அக்குழுவினால் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குழு அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் குறித்த பணிகளை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 05. | அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினைகள் வரையப்பட்டிருக்காமை | எதிர்காலத்தில் இந்த பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |
| 06. | ஒரு வாகனம் பாவனைக்குதவாதது என தெரிவிக்கப்பட்டிருந்தும் 8 மாதங்களுக்கும் மேலாக அகற்றப்பட்டிருக்காமை | பாவனைக்குதவாதவை என முடிவுசெய்யப்பட்ட வாகனத்தினை அகற்றுவதற்கான அனைத்து பணிகளும் முடிந்து, அந்த வாகனங்களின் பதிவை இரத்து செய்வதற்கான ஆவணங்கள், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், பதிவு இரத்து செய்யப்பட்ட பின், திணைக்களத்திலிருந்து அகற்ற திட்டமிடப்பட்டுள்ளது. |
| 07. | 29.12.2016 ஆந் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பத்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வினை சரிபார்க்கத் தவறியது. | கடந்த காலத்தில் எரிபொருள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டதால், எரிபொருள் நுகர்வு சோதனை தாமதமானது. அதன்பின்னர், இது தொடர்பான பணிகளுக்காக 2 குழுக்கள் நியமிக்கப்பட்டு, 31.12.2023க்குள் சுமார் 80% வாகனங்களின் எரிபொருள் நுகர்வு சோதனை முடிந்துள்ளது. (சம்பந்தப்பட்ட குழு உத்தியோகத்தர்கள் 15வது சனத்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு பணிகளில் அவ்வப்போது ஈடுபட்டு வருவதால், மீதமுள்ள 20% பணியை முடிக்க முடியவில்லை என்பதுடன், இதனையும் விரைவில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது) |
| 08. | வங்கி இணக்க கூற்றுக்களில் இருந்து வெளிப்படுத்தப்பட்ட, சரிசெய்யப்பட வேண்டிய நிலுவைகள் தொடர்பாக, நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்காமை | 31.12.2021 ஆந் திகதி முடிவடையும் ஆண்டில் வழங்கப்பட்ட ஆனால் 06 மாதங்களுக்கு மேலாக தீர்க்கப்படாத மொத்த பெறுமதி ரூ. 2,63,541.80 உடைய 12 காசோலைகள் இருந்தன.<br><br>அந்த காசோலைகள் அனைத்தும் 2022 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு செயறபடுத்தப்பட்டு தீர்க்கப்பட்டன.<br><br>• மொத்த பெறுமதி ரூ. 252,291.80 உடைய மூன்று காசோலைகளுக்கு மாற்று காசோலைகளை வழங்கிய பின்னர் 2022 ஜனவரி மாதத்தில் தீர்க்கப்பட்டது.<br>• மொத்த பெறுமதி ரூ. 11,250.00வுக்கான மீதமுள்ள ஒன்பது காசோலைகள் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால், அவை நிதி ஒழுங்குவிதிகள் 396(ஈ) இன் படி 2022 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளன. |
| 09. | ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்துவரும் கடன் நிலுவைகளின் இருப்பு | கடன் நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம் (இணைப்பு 01) |

| குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | தற்போதைய நிலை | | | | | |
| | | பெயர் மற்றும் பதவி | வரையான மீதி | கடன் அறவீடு | 2023/12/31 அன்று மீதி | கடன் அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள் நடவடிக்கை |
| ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்துவரும் கடன் நிலுவைகளின் இருப்பு | அ) காலம்சென்ற உத்தியோகத்தர்கள் ரூ.158,650.00 | 1.) ஈ.எஸ்.சீ. தயாரத்ன (புள்ளிவிபர உத்தியோகத்தர்) | ரூ.65,900.00 | ரூ..65,900.00 | - | 2022 ஒக்டோபர் மாதம் தீர்க்கப்பட்டுள்ளது. |
| | | 2.) கே. விக்னேஸ்வரன் (த.உ.உ) (கு.எ) | ரூ..92,750.00 | - | ரூ..92,750.00 | இந்த உத்தியோகத்தரின் நிலுவைத் தொகை, இறப்பு பணிக்கொடையிலிருந்து மீட்டெடுப்பதற்காக ஓய்வூதிய முகாமைத்துவ முறைமைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இறப்பு பணிக்கொடையை செயலாக்குவதற்காகச் சார்ந்திருப்பவர்களின் அறிக்கைகளை தருவிப்பதற்காக 20.10.2023 அன்று ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| | **மொத்தம்** | | **ரூ. 1,58,650.00.** | **ரூ.65,900.00** | **ரூ..92,750.00** | |
| | ஆ) பதவி வரிதான உத்தியோகத்தர் ரூ.. 5,24,261.00. | 1.) ஜீ.என். பெரேரா (புள்ளிவிபரவியலாளர்) | ரூ..23,320.00 | ரூ..23,320.00 | - | 2023 ஜூன் மாதம் கணக்குப் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. |
| | | 2.) எம்.ஏ.டீ.ஜீ. பெரேரா (அ.ஊசே.) | ரூ..27,305.00 | ரூ..27,305.00 | - | 2022.12.29 ஆந் திகதி கணக்குப் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 3.) ஆர்.பீ.எல். சுசன்த (அ.ஊசே.) | ரூ..17,050.00 | ரூ..17,050.00 | - | 2023.10.24 ஆந் திகதி கணக்குப் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. |
| | | 4.) டபிள்யு.எம்.ஜே.சீ. வீரகோன் (புள்ளிவிபர உத்தியோகத்தர்) | ரூ..27,080.00 | - | ரூ..27,080.00 | இந்தக் கடன் தொகையைச் செலுத்துமாறு பிணைதாரருக்குத் தெரிவிக்கப்பட்டு, இந்தக் கடன் தொகையைச் செலுத்த முடியவில்லை என்று அவர் 27.12.2023 திகதியிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். கடனை பதிவழிக்க அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. |
| | | 5.) ஏ.ஜீ.எம்.எஸ். குமார (புள்ளிவிபர உத்தியோகத்தர்) | ரூ. 38,410.00. | - | ரூ. 38,410.00. | இந்த உத்தியோகத்தரின் அடையாள அட்டை இலக்கத்திற்கான சாரதி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா என மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடம் வினவப்பட்டுள்ளது. இதுவரை பதில் கிடைக்கப்பெறவில்லை |
| | | 6.) டபிள்யு.ஏ.ஜே.எஸ். கமார (த.உ.உ) கு.எ) | ரூ..47,150.00 | - | ரூ..47,150.00 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின்படி இந்த கடன் தொகையை நான்கு தவணைகளில் செலுத்த பணிப்பாளர் நாயககத்தினால் (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்) அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன், 2023.12.31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி முடிக்குமாறு உத்தியோகத்தருக்க அறிவிக்கப்பட்டுள்ளது. |
| | | 7.) கே.எம்.டீ.ஆர்.பீ. பெரேரா (த.உ.உ) கு.எ) | ரூ..78,200.00 | - | ரூ..78,200.00 | இந்த உத்தியோகத்தர் தற்போது இலங்கையை விட்டு வெளியேறிச் சென்றாரா என வினவி 2023.04.19 ஆந் திகதியிட்டு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு கடிதமும் நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டுள்ளது, ஆனால் அதற்கு பதில் கிடைக்கவில்லை. |
| | | 8.) டீ.எச். சரத் (அ.ஊ.சே) | ரூ..6,572.00 | ரூ..6,572.00 | - | 2022 நவம்பர் மாதம் தீர்க்கப்பட்டுள்ளது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 9.) எம்.ஜீ.டீ.கே. பிரியகெலும் (அ.ஊ.சே.) | ரூ.104,250.00 | - | ரூ.104,250.00 | இந்த கடன் தொகையை உடனடியாக செலுத்துமாறு இந்த உத்தியோகத்தரிடம் தெரிவித்தும் இதுவரை பணம் செலுத்தப்படவில்லை. தொடர்ந்தும் கடன்தொகை செலுத்தத்தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் |
| | | 10.) எம்.பீ.ஆர்.ஜே பண்டார ( புள்ளிவிபர உதவியாளர்) | ரூ..95,140.00 | - | ரூ..95,140.00 | கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கமான DMR/2724/2020 இன் கீழ் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு 06.11.2023 அன்று மேலதிக விசாரணைக்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அரச வழக்கறிஞர் தெரிவித்துள்ளதுடன், மாவட்ட நீதிமன்றம் எமது திணைக்களத்திற்கு அறிவிகக்க வேண்டியுள்ளது . |
| | | 11.) எம்.எஸ்.எம். சப்ராஸ் (அ.ஊ.சே) | ரூ..59,784.00 | - | ரூ..59,784.00 | ஆ/04/கா.ஜே.ஜே./146 ஆம் இலக்க மற்றும் 03.10.2023 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம், இந்த உத்தியோகத்தருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு தற்போதைய நிலவரத்தைப் பற்றிய தகவல்களை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. |
| | **மொத்தம்** | | **ரூ. 5,24,261.** | **ரூ. 74,247.00.** | **ரூ. 4,50,014.00.** | |
| | இ) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ரூ. 82,790.00. | 1.) எம்.ஏ.ஆர்.எஸ்.கே. ஜயசேக்கர (மு.சே. உ.சே) | ரூ. 82,790.00. | ரூ. 82,790.00. | - | 2022 ஆகஸ்ட் மாதம் தீர்க்கப்பட்டுள்ளது. |
| | **மொத்தம்** | | **ரூ..82,790.00** | **ரூ..82,790.00** | - | |

**இரண்டாவது பகுதி : 62.00.**

| தொடர் இல | அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சபையினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
|---|---|---|
| 01. | கோரப்படும் தகவல்கள் வழங்கப்படாமை தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கும் ஆவணம் பேணப்படாமை. | குறித்த ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுகிறது. |
| 02. | பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்காமை | தற்போது திணைக்களத்திற்காக பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 03. | பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்து மதிப்பிடுவதற்கான முறைமையொன்று நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டிருக்காமை. | பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்து மதிப்பிடுவதற்கான உள்ளக முறைமையொன்று குறித்து திணைக்களம் கலந்துரையாடி வருகிறது. |
| 04. | 2018 ஜனவரி 24 ஆந் திகதியிட்ட 02/2018ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி முறையாக தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தைத் தயாரிக்கத் தவறியமை. | தற்போது மனிதவளத் திட்டம் 90% பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |
| 05. | தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் மூலம் 50 சதவீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி வாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்காமை. | 1. மனிதவளத் திட்டம் தயார் செய்ய்பட்டுவருவதுடன், அதன் முன்னேற்றம் 90% ஆகும். அதைத் தயாரிக்கும் போது, பல்வேறு துறைகளால் கோரப்பட்ட பயிற்சித் திட்டங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, 2023ஆம் ஆண்டுக்கான பயிற்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது. (இணைப்பு 02)<br>2. 2023/24 சனத்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்புக்காக, திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் டேப்லெட் கணினி பயன்பாடு, சனத்தொகை கணக்கெடுப்பு பற்றிய விளக்கம் மற்றும் களப்பணிகள் குறித்த பயிற்சி நிகழ்ச்சிகள் பயிற்சி பிரிவு மற்றும் 25 மாவட்டங்களில் மாவட்ட செயலக அலுவலகங்களில் தலா 8 மணி நேரம் மூன்று நாட்களுக்கு நடத்தப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | 3. அதன்படி, 95% க்கும் அதிகமான ஊழியர்களுக்கு 12 மணி நேரத்திற்கும் மேலாக பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 06. | அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கி செயலாற்றுகை ஒப்பந்தங்களை தயாரித்து ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்காமை. | பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 (I) இன் படி, 2023 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திட வேண்டிய அவசியமில்லை. |
| 07. | மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் திறன் விருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் எந்த ஒரு சிரேஷ்ட அதிகாரியும் நிறுவனத்தில் நியமிக்கப்பட்டிருக்காமை. | திறன் விருத்தித் திட்டங்களை செயல்படுத்த பணிப்பாளர் (பயிற்சி) நியமிக்கப்பட்டுள்ளார். |
| 08. | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தமை | 1. மனிதவளத் திட்டம் தயார் செய்யபட்டுவருவதுடன், அதன் முன்னேற்றம் 90% ஆகும். அதைத் தயாரிக்கும் போது, பல்வேறு துறைகளால் கோரப்பட்ட பயிற்சித் திட்டங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, 2023ஆம் ஆண்டுக்கான பயிற்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது. (இணைப்பு 02)<br>2. 2023/24 சனத்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்புக்காக, திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் டேப்லெட் கணினி பயன்பாடு, சனத்தொகை கணக்கெடுப்பு பற்றிய விளக்கம் மற்றும் களப்பணிகள் குறித்த பயிற்சி நிகழ்ச்சிகள் பயிற்சி பிரிவு மற்றும் 25 மாவட்டங்களில் மாவட்ட செயலக அலுவலகங்களில் தலா 8 மணி நேரம் மூன்று நாட்களுக்கு நடத்தப்பட்டது.<br>3. அதன்படி, 90% க்கும் அதிகமான ஊழியர்களுக்கு 12 மணி நேரத்திற்கும் மேலாக பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 09. | நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு கருத்து விமர்சனத்திற்குரிய அல்லது பாதகமான மட்டத்தில் இருந்தமை. | |
| | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் பின்வரும் காரணங்களுக்காக கிடைக்கப்பெற்றுள்ளது. | |
| | 09.1.<br>• வேறு வருமான கணக்கு உத்தியோகத்தர்கள் சார்பாக திரட்டப்பட்ட வருமானம் நிதி செயலாற்றுகை கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தமை<br>• 31.12.2021 அன்று திறைசேரிக்கு செலுத்தப்பட்ட கட்டுத் தொகை | இதற்காக, 2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கூற்றில் சரிய்யப்பட்டுள்ளதுடன்,<br><br>2022 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதிநிலை கூற்றுகள் தொடர்பாக தெளிவான கணக்காய்வு கருத்து கிடைக்கப்பெற்றுள்ளது. |

| | | |
|---|---|---|
| | மீதி, நிதி செயலாற்றுகை மற்றும் நிதி நிலை அறிக்கையில் காட்டப்பட்டுள்ளமை.<br>• கட்டுத்தொகை சரிப்படுத்தல் கூற்றுக்காக திருத்தப்பட்ட ACA 07 படிவம் பயன்படுத்தப்பட்டிருக்காமை | |
| | 9.2.<br>நிதி ஒழுங்குவிதி 770(2) இன் பிரகாரம் முறையான சொத்து அகற்றல் கட்டளையைப் பெற்றுக்கொள்ளாமல், நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றின் மூலம் அகற்றியமை | பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பேரில் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. தற்போது, மதிப்பீட்டுக் குழு மற்றும் திணைக்கள தீர்வுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில், திணைக்களத்தின் கொள்முதல் குழுவினதும் பணிப்பாளர் நாயகத்தினதும் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அகற்றப்படும். அதன்படி சொத்துக்கள் புத்தகங்களில் இருந்து நீக்கப்படும். |
| | 9.3.<br>2020.12.31 வருடாந்த பொருட் பட்டியல் கணக்கெடுப்பின் பிரகாரம் விற்பனக்கு பரிந்துரைக்கப்பட்ட பொருட்கள் விற்பனைகள் என சொத்துக்களில் இருந்து நீக்கப்பட்டிருந்தமை. | 2023 வருடம் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அகற்றுதல்களும் CIGAS கணக்குப் புத்தகத்தின் பிரகாரம் சரியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | 9.4.<br>நிதியல்லாத சொத்துக்களுக்கான கணக்கீட்டில் குறைபாடுகள் | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் 2022 ஆம் ஆண்டில் CIGAS மூலம் கணக்கிடப்பட்டு நிதிநிலை அறிக்கைகளில் நிதி அல்லாத சொத்துகளின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது. |
| 10. | அரசு கணக்குக் குழுவின் பரிந்துரைகள்/ஆணைகள் நடைமுறைப்படுத்தப்படாமை | |
| | 10.1.<br>செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் மற்றும் குறைபாடுகள் இருந்தமை | செயற்திட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும். |
| | 10.2.<br>• திணைக்களத்தின் பணிக்குழாமில் குறிப்பிடத்தக்க வெற்றிடங்கள் இருந்தமை | • அரச வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் படி அரசாங்க சேவை ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும், பிரதமர் அலுவலகத்தின் அரசாங்க சேவை ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்வது தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு 2023.03.15 மற்றும் 2023.06.27 திகதியிட்ட கடிதங்கள் மூலம் |

| | | |
|---|---|---|
| | | திணைக்கள பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் கோரப்பட்ட போதும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லை. மீண்டும், 12.10.2023 அன்று, திணைக்கள பதவிகளுக்கு வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு வரையறுக்கப்பட்ட மற்றும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய அங்கீகாரம் கோரி, முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்துக்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. திணைக்கள பணிக்குழாமில் நிலவும் ஆரம்ப வகுப்பு வெற்றிடங்களை நிரப்புவதற்கு அபிவிருத்தி உதவியாளர்களை அசைாங்கம் வெளியிட்டுள்ள விதிமுறைகளின்படி ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வெற்றிடமாகக உள்ள பதவிகளின் கடமைகளை மேற்கொள்வதற்கான முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | • நீதிமன்ற நடவடிக்கையொன்றின் காரணமாக சிரேஷ்ட நிலைப் பதவிகளை நிரப்புவதில் 2007 ஆம் ஆண்டு முதல் சிக்கல் நிலவி வருவதால், பதவிகள் வெற்றிடமாக உள்ளன. | புள்ளிவிபரவியலாளர்கள், புள்ளிவிபரவியலாளர்களினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கொன்றின் காரணமாக, சிரேஷ்ட நிலைப் பதவிகளை நிரப்புவதில் 2007 ஆம் ஆண்டு முதல் சிக்கல் நிலவி வருகிறது. எனினும், உயர் நீதிமன்றம் அந்த வழக்கை 14.12.2022 அன்று தள்ளுபடி செய்தது. **இதைத் தொடர்ந்து, திணைக்களம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.**<br><br>• வெற்றிடமாக உள்ள பணிப்பாளர் (புள்ளிவிபரம்) பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டுள்ளதுடன், 2024ஆம் ஆண்டின் முன் அரைப் பகுதியில் நிரந்தரமாக குறித்த பதவி வெற்றிடத்தை நிரப்பத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>• உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு காரணமாக, துறையின் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரவியல்) பதவிக்கான நிரந்தர நியமனம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 29 உத்தியோகத்தர்கள் பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரவியல்) பதவியின் பணிகளைச் செய்ய நியமிக்கப்பட்டனர். |

| | | |
|---|---|---|
| | | • சம்பந்தப்பட்ட வழக்கு14.12.2022 அன்று உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பிரதிப் பணிப்பாளரின் (புள்ளிவிபரம்) கடமைகளை நிறைவேற்ற நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க பொதுச் சேவை ஆணைக்குழு 28 அதிகாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கியது. அந்த 28 உத்தியோகத்தர்களில் 19 பேர் தற்போது ஓய்வு பெற்றுள்ளதுடன், தற்போது திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் (புள்ளிவிபரங்கள்) 09 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், அதற்கு மேலதிகமாக பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரம்) பணிகளைச் செய்ய 15 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் அதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>• மேலதிக பணிப்பாளர் நாயகம் (புள்ளிவிபரவியல்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக, சிரேஷ்ட நிறைவேற்றுச் சேவை வகுதி தொடர்பான ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டு, 22.12.2023 அன்று பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| | 10.3.<br>2012ஆம் ஆண்டு சனத்தொகை, வீட்டுவசதி கணக்கெடுப்பு அறிக்கை தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படாமை | 19.03.2012 அன்று இறுதிக் கணக்கெடுப்பு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததோடு, தரவு ஸ்கேன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தரவுகளை கணினிமயமாக்கி பல இடைக்கால அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.<br>1. 2012ஆம் ஆண்டு வீட்டு வசதி தொடர்பான ஆரம்ப அறிக்கை (மும்மொழிகளில்)<br>2. 2014ஆம் ஆண்டு சனத்தொகை தொடர்பான ஆரம்ப அறிக்கை (மும்மொழிகளில்)<br>4. 2015ஆம் ஆண்டு 2012 தொமைதிப்பு இறுதி அறிக்கை (மும்மொழிகளில்)<br>தயாரிக்கப்பட்டு இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டு, அச்சிடப்பட்டுள்ளது. |
| | 10.4.<br>சமூக விஞ்ஞானம் மற்றும் சுகாதார கணக்கெடுப்பு 2014/2015 | 2016ஆம் ஆண்டு குறித்த கணக்கெடுப்புCAPI (Computer Assisted Personal Interview ) முறைமையை |

| | | |
|---|---|---|
| | 2015ஆம் ஆண்டில் எதிர்பார்த்த இலக்கை அடையாமை | பயன்படுத்தி வெற்றிகரமாக செய்யப்பட்டமை தரவுக் கோப்பு தயாரித்து பகுப்பாய்வின் முடிவில், தொடர்புடைய இறுதி அறிக்கை 2017 இல் அச்சிடப்பட்டதுடன், திணைக்களத்தின் இணையதளத்தில் மென்பிரதி வெளியிடப்பட்டது. மேலும், அதன் மூலம் வழங்குவதற்கு எதிர்பார்த்த சுட்டி சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடத்தப்படும் ஒவ்வொரு தொகை மதிப்பு மற்றும் கணக்கெடுப்புக்கும் தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதுடன், தற்போது இந்தத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய தரவு சேகரிப்பான 2024 ஆம் ஆண்டு சனத்தொகை மற்றும் வீட்டுவசதிக் கணக்கெடுப்பு டேப்லெட் கணினியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது. இதன் போது டேப்லெட் கணினிகளின் உதவியுடன் தரவுகள்சேகரிக்கப்படுகின்றன. |
| | 10.5.<br>தேசியக் கணக்குகளைத் தயாரிப்பதற்கான 2002 அடிப்படை வருடம் 2010 ஆக மாற்றியதில் 2014 இல் பொருளாதார வளர்ச்சி விகிதம் மாற்றமுற்றமை. | தேசிய கணக்குகளை தயாரிப்பதில் சர்வதேச வழிகாட்டுதல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதன்படி, 2010ஐ அடிப்படை ஆண்டாக மாற்றியதில், தேசிய கணக்குகளை தயாரிப்பதற்கான ஐ.நா.வின் சர்வதேச முறையான SNA 2008 பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைகளின்படி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் அடிப்படை ஆண்டை மாற்ற வேண்டும். எனவே, அடிப்படை ஆண்டை மாற்றுவதற்கான முக்கிய காரணம்,<br>• பொருளாதாரத்தில் அவ்வப்போது ஏற்படும் கட்டமைப்பு மாற்றங்கள், உற்பத்தி மாற்றங்கள், விலை மாற்றங்கள்<br>• தொடர்ச்சியாக பொருளாதாரத்தில் ஏற்படும் முன்னேற்றங்கள், புத்தாக்கங்கள், புதிய கண்டுபிடிப்புகள்<br>• நுகர்வு முறை, பயன்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள்<br>அதன்படி, 2015 ஆம் ஆண்டில், தேசிய கணக்குகள்அடிப்படை ஆண்டை 2010 ஆகவும் தற்போது 2015 ஆம் ஆண்டையும் பயன்படுத்தி தேசிய கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு, அடிப்படை ஆண்டை அவ்வப்போது மாற்றுவதன் மூலம், பொருளாதாரத்தின் உண்மையான நிலையை துல்லியமாக |

| | | |
|---|---|---|
| | | பிரதிபலிக்கும் நடவடிக்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. |
| 11. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நிதி ஒழுங்கு விதிகள்156 (1) இன் படி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடத் தவறியமை. | • நிதி ஒழுங்கு விதிகள் 770(ஆ) இன் படி, விபத்துக்குள்ளான PC-2421 ஆம் இலக்க கெப் வாகனத்தின் தற்போதைய மதிப்பீட்டு பெறுமதி, நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, நிதி ஒழுங்கு விதிகள்104(4)ன்படி அரசுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் இழப்புகளுக்குப் பொறுப்பானவர்களைத் தீர்மானிக்க 05.01.2024 அன்று திறைசேரி பிரதிச் செயலாளர் ஒரு குழுவை நியமித்துள்ளதுடன், அக்குழுவின் அறிக்கை மற்றும் நிதி விதிமுறைகளின் பிரகாரம் மேற்கொண்டு பணிகள் நடைபெற உள்ளன.<br>• கேகாலை, யாழ்ப்பாணம் மற்றும் மாத்தளை புள்ளிவிபரப் பிரிவுகளில் டெப் கணினி தொலைந்து போனமைக்கான முழுமையான நட்ட மீதித்தொகை ரூ.236,403.00 வகைகூறவேண்டிய உத்தியோத்தர்களிடம் அறவிடப்பட்டுள்ளது.<br>• கொழும்பு மாவட்ட புள்ளிவிபர பிரிவில் காணாமல் போன ரூ.15,000.00 பெறுமதியான சம்சுங் அச்சு இயந்திரம் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைக்கு அமைய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.<br>• வாகன விபத்து தொடர்பில் கிடைக்கப்பெறவேண்டிய ரூ. 232,275.00 நட்டம் காப்புறுதியின் மூலம் அறவிடப்பட்டுள்ளது.<br>• (ரூ. 326,000.00) பெறுமதியான ஒரு டிஜிடல் டிஸ்பிளே அலகு தீ பற்றியதால் ஏற்பட்ட பாதிப்பு 2022ஆம் ஆண்டு பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளது. |

| பயிற்சி பட்டியல் -2023 | | | | |
|---|---|---|---|---|
| **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பெயர் (தமிழ்)** | **பயிலுனர்களின் மொத்த எண்ணிக்கை** | **இலக்கு** | **பங்கேற்பாளர்கள்** | **திகதிகள்** |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் அனுபவங்கள் மற்றும் சவால்கள்" (இணையவழி) | *85* | *100* | *DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO* | *2023.01.09* |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "தமிழ் மொழிமூல நிகழ்ச்சித் திட்டம் - தொழிற்படை கணக்கெடுப்பு பேண்தகு அபிவிருத்தி குறிகாட்டிகள்" (இணையவழி) | *90* | *100* | *DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO* | *2023.01.11* |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - 'சவால்களுக்கு மத்தியில் அடுத்துவரும் தசாப்தத்திற்கான தரவுசேகரிப்பு' (இணையவழி) | *94* | *100* | *DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO* | *2023.01.16* |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - 'அனர்த்தங்கள் மற்றும் காலநிலை மாற்றங்களினால் அபிவிருத்தி செயன்முறைக்கு ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடுவதில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணி' (இணையவழி) | *96* | *100* | *DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO* | *2023.01.23* |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - ' மாவட்ட புள்ளிவிபர பிரிவொன்றினால் அடையப்பெற்ற வெற்றி - குருணாகல் ' | *88* | *100* | *DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO* | *2023.01.30* |
| தொற்றா நோய்கள் -வைத்தியர் லலித் ஏகநாயக்க - லங்கா வைத்தியசாலை | *186* | *186* | *DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO/ICTO/ICTA/MSO/KKS* | *2023.01.20* |
| கள ஆய்வுப் பயணம், பொருளியல் கற்கைகள் பிரிவு - ருஹுணு பல்கலைக்கழகம் | *50* | *100* | மாணவர்கள் | *2023.01.19* |
| தலைமைத்துவம், ஆக்கத்திறன் மற்றும் அதிகபட்ச செயலாற்றுகை பற்றிய உரை | *103* | *103* | *DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO/ICTO/ICTA/MSO/KKS* | *2023.02.10* |

| | | | | |
|---|---|---|---|---|
| கள ஆய்வுப் பயணம், கணித கற்கைகள் பிரிவு - ருஹுணு பல்கலைக்கழகம் | 160 | 160 | மாணவர்கள் | 2023.02.16 |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "தமிழ் மொழிமூல நிகழ்ச்சித் திட்டம் - சனத்தொகை கணக்கெடுப்பு வரலாறும் 15ஆவது சனத்தொகை கணக்கெடுப்பும்" | 44 | 100 | DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO | 2023.02.01 |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"Crypto curency and Blockchain' பற்றிய அறிமுகம் | 100 | 100 | DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO/ICTO/ICTA/MSO/KKS | 2023.02.06 |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -" நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படை வருடத்தை இற்றைப்படுத்தல்' | 90 | 100 | DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO | 2023.02.13 |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"MRCB 2022' பற்றிய அறிமுகம் இரண்டாவது பகுதி' | 95 | 100 | DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO | 2023.03.27 |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு - "தமிழ் மொழிமூல நிகழ்ச்சித் திட்டம் - இலங்கையில் வறுமை" | 50 | 100 | DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO | 2023.02.15 |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"MRCB 2022' பற்றிய அறிமுகம் | 98 | 100 | DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO | 2023.02.20 |
| மாவட்ட புள்ளிவிபர பிரிவு உத்தியோகத்தர்களுக்கான Excel மற்றும் word பயிற்சி (சிங்களம்) | 55 | 55 | STN / SO / DO | 2023.02.21 |
| மாவட்ட புள்ளிவிபர பிரிவு உத்தியோகத்தர்களுக்கான Excel மற்றும் word பயிற்சி (தமிழ்) | 23 | 23 | STN / SO / DO | 2023.02.21 |
| புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | 37 | 37 | DO | 2023.02.28 |
| SPSS மென்பொருள் பற்றிய ஆரம்ப பயிற்சி | 27 | 30 | STN / SO / DO | 2023.03.08,14,15,16,21, |
| தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமானங்கள் | 49 | 50 | STN / SO / DO | 2023.03.14 |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"DHS - கணக்கெடுப்பு பற்றிய அறிமுகம் | 100 | 100 | DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO | 2023.02.27 |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"அலுவலக முறைமை பற்றிய அறிமுகம் | 97 | 100 | DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO | 2023.03.13 |
| உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் / குறிகாட்டிகள் பற்றிய விழிப்புணர்வு -"Mobile photography' பற்றிய அறிமுகம் | 90 | 100 | DG / ADG / Director / DD / AD / SSTN / STN / SO / DO | 2023.03.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| STATA கணினி மென்பொருளைப் பயன்படுத்தி தரவு செம்மையாக்கல் மற்றும் முன்வைத்தல் முறைமை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 27 | 30 | STN / SO / DO | 2023.03.28` |
| திணைக்கள பணிகள் குறித்த விழிப்புணர்வு - மகரகம தேசிய கல்வி நிறுவகம் | 29 | 29 | மாணவர்கள் | 2023.04.03 |
| தமிழ் 200 மணித்தியால கற்கை நெறி (இணையவழி) | 100 | 100 | STN / SO /AD/ICTO/அதிபர்கள்/வைத்திய உத்தியோகத்தர்கள்/ பொறியியலாளர்கள்/சுங்க உத்தியோகத்தர்கள் | 2023.05.20 |
| தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமானங்கள் | 31 | 31 | STN / SO / DO | 2023.05.23 |
| வாகன பராமரிப்பு சம்பந்தமாக விழிப்பூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சி | 75 | 75 | DD/ STN / SO / DO/ICTO/ICTA சாரதிகள் | 2023.06.14 |
| வாகன பராமரிப்பு சம்பந்தமாக விழிப்பூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சி | 68 | 70 | DD/ STN / SO / DO/ICTO/ICTA | 2023.07.06 |
| CS PRO பயிற்சி நிகழ்ச்சி | 30 | 30 | பணிப்பாளர்/AD/ICTO/ICTA | 2023.07.17-21 |
| யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு - திணைக்கள பணிகள் குறித்து விளக்கமளித்தல் | 61 | 65 | மாணவர்கள் | 2023.07.27 |
| Qgis பற்றிய பயிற்சி நிகழ்ச்சி | 10 | 30 | DD/ STN / SO / DO | 2023.08.28 |
| R பற்றிய பயிற்சி நிகழ்ச்சி | 25 | 30 | DD/ STN / SO / DO | 2023.08.29 |
| Small Area Estimation பற்றிய பயிற்சி நிகழ்ச்சி | 26 | 26 | DD/ STN / SO / DO | 2023.09.04 |
| தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள புதிய முகாமைத்துவ சேவை (III) உத்தியோகத்தர்களுக்கான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சி | 14 | 14 | MSO | 2023.11.27 -2023.12.01 |
| Data Management and Integrity Unit (DMIU) நிறுவுதல் மற்றும் NADA முறைமையை இற்றைப்படுத்தல் பற்றிய பயிற்சி | 30 | 30 | DD/ STN / SO / DO/ICTO/ICTA | 2023.12.14 |
| இலங்கை கடற்படை உத்தியோகத்தர்களுக்கான விசேட செயலமர்வு - 2023 (திணைக்களத்தின் பணிகள் குறித்து விளக்கமளித்தல்) | 60 | 60 | கடற்படை உத்தியோகத்தர்கள் | 2023.12.15 |
| சாரதிகளுக்கான விஞ்ஞானபூர்வமான, சிக்கனமான மற்றும் பாதுகாப்பான முறையில் வாகனங்களை செலுத்தல் | 3 | 3 | சாரதிகள் | 28.02.2023 |
| Development of Digital Library Collection | 1 | 1 | நூலகர் | 07.06.2023 |

| | | | | |
|---|---|---|---|---|
| *'Python and Machine Learning - 2023'* தொடர்பில் இரண்டு நாள் செயலமர்வு | *30* | *30* | *DD/ STN / SO / DO* | *2023.12.06-08* |
| **மொத்தம்** | ***2527*** | ***2798*** | | |

*DG* - பணிப்பாளர் நாயகம்

*ADG* - மேலதிகப் பணிப்பாளர் நாயகம்

*DD*- பிரதிப் பணிப்பாளர்

*AD* - உதவிப் பணிப்பாளர்

*SSTN*- சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்

*STN* - புள்ளிவிபரவியலாளர்

*SO* - புள்ளிவிபர உத்தியோகத்தர்

*DO* - அபிவிருத்தி உத்தியோகத்தர்

*ICTO* - தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தர்

*ICTA* - தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர்

*MSO* - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

*OES* - அலுவலக தாபன சேவை

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. *290* இற்காக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

பெயர் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 290

நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

பகுதி 1 :- 71.00

| தொடர் இலக்கம் | அறிக்கையில் குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| 1 | நுகர்வுப் பொருட்கள் மீதான பதிவு நாளாந்த அடிப்படையில் பூரணப்படுத்தி பேணப்படவில்லை. | நுகர்வுப் பொருட்கள் மீதான பதிவேடு நாளாந்த அடிப்படையில் பூரணப்படுத்தப்பட்டு பிரதான களஞ்சியத்தில் பேணப்படுகின்றது. |
| 2 | சேதங்கள் பற்றிய ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை | 2023.12.31 வரையில் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளது. |
| 3 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத் ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை | இயலுமானவரை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பாதில்கள் ஒரு மாத்ததினுள் அனுப்பப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டில் கோவிட் பெருநோய் தொற்று காணபட்ட போது பயணக் கட்டுப்பாடு, அலுவலகம் மூடப்படமை போன்ற காரணங்களினால் கடமைக்கு சமூகம் தந்த உத்தியோகத்தரின் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டமையினால், சில சந்தர்ப்பங்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஐயவினாக்களுக்கு பதிலளிக்க தாமதங்கள் ஏற்பட்டன. எவ்வாறாயினும் நாடு வழமைக்கு திரும்பியவுடன், தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. |
| 4 | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமைக் கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தன | 2021 ஆம் ஆண்டு காணப்பட்ட கோவிட் பெருநோய் தொற்று காரணமாக காணப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள், தலைமை காரியாலயம் மற்றும் பிராந்திய காரியாலயங்கள் மூடியிருந்த காரணத்தினால், உத்தியோகத்தர்களின் வருகையில் மட்டுப்படுத்தல் காணப்படதனாலும் தபால் தாமதங்கள் காணப்பட்டதனாலும் சில சந்தர்ப்பங்களில் உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிப்பதில் தாமதங்கள் காணப்பட்டன. |

| | | |
|---|---|---|
| | | எவ்வாறாயினும் நாடு வழமைக்கு திரும்பியவுடன் தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்படன. |
| 5 | 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ. 756(6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை. | 2021.12.31 முடிவடைந்த வருடத்தின் பொருள் கணிப்பாய்வு அறிக்கைகள் 2022.04.22 மற்றும் 2022.05.23 ஆம் திகதிகளில் காணக்காய்வு தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. |
| 6 | வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ள்ள காலப் பகுதியில் மேற்கொள்ளப்படவில்லை | பற்றாக்குறைகள், மிகைகள் மற்றும் பொருள் கணிப்பாய்வு பரிந்துரைகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 7 | அனைத்து வாகனங்களதும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கைவசம் இல்லை. | 2023.12.31 அன்று உள்ளவாறு, லீஸ் தவணைகள் செலுத்தப்படும் 08 ஜீப்கள் தவிர்த்து திணைக்களத்தின் ஏனைய அனைத்து வாகனங்களுக்கும் வாகன பதிவுச் சான்றிதழ்கள் காணப்படுகின்றன. |
| 8 | அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையபட்டிருக்கவில்லை | அனைத்து பூல் வாகனங்களுக்குக்கும் தேசிய சின்னம் வரையப்படவில்லை. ஏனெனில் அவை சோதனைகள்/கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது அவை முன்கூட்டியே உளவு பார்க்கப்படலாம். |
| 9 | வாகனம் ஒன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாத்ததிற்கும் குறைவான | விற்றொழிக்கப்படுவதற்கான வாகனங்கள் 2021 ஆம் ஆண்டில் இலங்கை பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் விவசாய அமைச்சிடம் கையளிக்கப்பட்டுன்ளன. |

| | | |
|---|---|---|
| | காலப்பகுதியினுள் விற்றொழிக்கப்படாமை | |
| 10 | வாகனமொவ்வொன்றுக்குமான வாகன சம்பவ பதிவேடுகள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்படவில்லை | 2023.12.31 அன்றுள்ளவாறு ஒவ்வொரு வாகனத்திற்குமான வாகன சம்பவ பதிவேடுகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. |
| 11 | ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ. 103, 104, 109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை | நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம், விபத்துக்குட்பட்ட வாகனம் தொடர்பில் விசாரணை சமையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 12 | 2016.12.29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியன் ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் தகனச் சோதனை மேற்கொள்ளப்படவில்லை. | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பில் பரிசோதிக்கப்பட்ட போதும், கோவிட் பெருநோய் தொற்று மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட QR Code முறைமையினால் ஏற்பட்ட வரையறைகள் காரணமாக அதனை செயன்முறைபடுத்த முடியவில்லை. தற்போதும், எரிபொருள் ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு எரிபொருள் கொள்வனவு செய்யப்படும் காரணத்தினால், எரிபொருள் நுகர்வி தொடர்பில் மீள பரீட்சிக்கும் செயன்முறை சிக்கல் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். |
| 13 | ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை | தொடர் இலக்கம் 02 இன் அரச உத்தியோகத்தர்களது முற்பண B கணக்கின் கீழான விடயங்களில் 2021.12.31 அன்று முடிவடைந்த ஆண்டின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள்<br>*<u>திருமதி ஜி. டி. குணசீலி</u>*<br>*<u>மு.சே.உ. வகுப்பு I</u>*<br>*<u>கடன் மீதி ரூபா. 191,514.00</u>*<br><br>தேசிய காப்புறுதி நிம்மிக்கை நிதியத்தின் காப்பீட்டிலிருந்து கடன் மீதியை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நிதி அமைச்சின் செயலாளர், 2023.05.17 ஆம் திகதிய கடிதம் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு அறிவித்துள்ளார். 2023.09.04 ஆம் திகதிய தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தலைவரின் கடிதம் மூலம் அக் கடிதத்திற்கு கிடைக்கப்பொற்ற பதிலில், இவ் உத்தியோகத்தரின் ஆதனக் கடனை செலுத்தி தீர்ப்பதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு எதுவித பொறுப்பும் இல்லை |

என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் விளக்கி மற்றும் ஆதனக் கடனின் மீளப்பெறுகை மீது சட்டமான அதிபரின் தீர்மானத்தைக் கோரி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திலிருந்து தீர்மானம் காலதாமதமானதனால், இது தொடர்பில் ஆலோசனைக் கோரி 2023.10.27 அன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. மேலும், 2023.11.08 ஆம் திகதிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் செயலாளரது கடித்த்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதுடன் எதிர்கால நடவடிக்கை தொடர்பில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரிடம் வினவப்பட்டது.

***திரு எம். ஜி. ஜினசேன***

***காரியாலய ஊழியர் III***

***கடன் மீதி ரூபா. 146,380.00***

இவ் ஊழியருக்கு நாளாந்த அடிப்படையில் நியமனம் கிடைக்கப்பெற்ற போது அவரது வயது 45 ஆகும். விதவைகள் தபுதாரர்கள் & அநாதைகள் ஓய்வூதிய இலக்கத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு இவ் ஊழியரது விபரங்கள் அனுப்பிவைக்கப்பட்ட போது, அவ் ஊழியரை பணிக்கமர்த்தியதன் தொடர்பில், அரச நிருவாக அமைச்சின் செயலாளரின் அனுமதி அல்லது அமைச்சரவை அமைச்சர்களின் கொள்கை தீர்மானம் தொடர்பிலான தகவல்களை சமர்பிக்க கோரியிருந்தார். அதற்கமைவாக, இவ் விடயம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது. அவர் அதனை தாபனங்களின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். மேலும் ஆலோசனை கிடைக்கப்பெற்றதன் பேரில் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கபாபடும்.

இது தொடர்பில் நினைவூட்டல் கடிதம் ஒன்று இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2023.07.20 அன்று அனுப்பிவைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | | 2023.09.12 ஆம் திகதிய கா.சே.சே./V14/J1309 ஆம் இலக்க இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம், இவ் விடயம் தொடர்பில் அமைச்சரவை அமைச்சரகளுக்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் அறிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.<br><br>***<u>திரு. எம். ஜி.ஜே. எஸ். பண்டார</u>***<br>***<u>காரியாலய ஊழியர் III</u>***<br>***<u>கடன் மீதி ரூபா. 10,384.03</u>***<br>உத்தரவாதம் வழங்கியோரிடமிருந்து கடன் மீதி மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2323.11.30 அன்று மீளப்பெற வேண்டிய கடன் மீதி ரூபா 10,384.03 ஆகும்.<br><br>***<u>திரு. வேலப்புராச்சி</u>***<br>***<u>சாரதி II</u>***<br>***<u>கடன் மீதி ரூபா. 252,045.00</u>***<br>நிலுவையிலுள்ள கடன் மீதிகளை மீளப்பெறுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2023.05.10 மற்றும் 2023.08.17 ஆம் திகதிகளில் நினைவூட்டல் கடிதங்களுகம் அனுப்பப்பட்டுள்ளன. 2023.09.15 அன்று தொலைபேசி மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கயவிபரக் கோவையுடன் தொடர்புடைய ஆவணங்களை சமர்பிக்குமாறு கோரப்பட்டது. அதற்கமைவாக 2023.09.20 அன்று அவை அனுப்பிவைக்கப்பட்டன. மேலும், 2023.10.09 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தின் கோரிக்கையின் பிரகாரம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் சமர்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2023.11.28 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கோரப்பட்ட தகவல்கள் மீள அனுப்பப்பட்டன என்பதுடன் கடன் செலுத்தப்பட்ட வவுச்சர்/ரசீது தொடர்பான தகவல்கள் எம்மிடம் இல்லை என அறிவிக்கபட்டது. நியமனக் கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியை அனுப்பிவைக்குமாறு நினைவூட்டல் கடிதம் ஒன்று இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2023.12.01 திகதி அன்று அனுப்பிவைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | ***திரு டபிள்யு. ஏ. ஐ. மதுசான்.***<br>***கடன் மீதி ரூபா. 148,000.00***<br>நிலுவையிலுள்ள கடன் மீதிகள் மீளப்பெறுகை மீதான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில், எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுப்பதற்கான சட்டமா அதிபர் திணைக்களம் கோரிய ஆவணங்கள் 2023.05.10 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று 2023.08.28 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தில் நடைபெற்றது என்பதுடன் அவ் வழக்கினை தாக்கல் செய்வதற்கான தகவல்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன. சட்டமா அதிபரினால் கோரப்பட்ட அறிக்கைக்கு பதிலளிப்பதற்கு அவர் வேலைபுரிந்த பிரிவிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவர் சேவை செய்த பிரிவிலிருந்து அவர் பெற்றுக்கொண்ட லீவு தொடர்பிலான தகவல்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.<br><br>***திரு. டி.பிபி. மில்ரோய்***<br>***காரிய ஊழியர் i***<br>***கடன் மீதி ரூபாய் 120,847.94***<br>வழக்கின் தற்போதைய நிலவரம் தொடர்பில் வினவி, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2023. 08.28 அன்று கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 2023.10.30 அன்று நினைவூட்டல் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.<br>சட்டமா அதிபர் தணைக்களத்தினது 2023.11.06 ஆம் திகதிய கடிதத்தில், ஊழியருக்கு பிடியாணை பிறப்பிக்க நாம் அனுப்பிய 2023.02.01 கடிதமானது நீதிமன்ற நடவடிக்கைகளிற்கு இணைப்பாக இணைக்கப்பட்டதாகவும், நீதிமன்றத்தினால் அடுத்த வழக்கு திகதி அறிவிக்கப்பட்டதும் தெரிவிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | *திருமதி ஆர். எம். வி. செவ்வந்தி*<br>*அலுவலக ஊழியர் III*<br>*<u>கடன் மீதி ரூபா. 132,891.25</u>*<br>2022, ஏப்பிரல் முதல் மாதாந்தம் ரூபா 5,000/- கடன் மீதிக்காக மீள செலுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக 2022.12.31 முதல் 22 மாதங்கள் மீதமாகவுள்ளது. இவ் உத்தியோகத்தரை மீள பணிக்கமர்த்துவது தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்பதுடன் சுய விபரக் கோவையை பார்ப்பதற்காக அரச நிருவாக அமைச்சின் செயலாளரின் கோரிக்கையின் மீது 2023.08.25 அன்று அரச நிருவாக அமைச்சிற்கு கோப்பு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தற்போது நிலுவையிலுள்ள கடன் மீதி ரூபா 132,891.25 ஆகும்.<br>அவரது மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது.ன், அவரது சுயவிபரக் கோவை நிருவாகப் பிரிவிற்கு இன்னும் கிடைக்கப்பெறவில்லை. |
| 14 | காலாவதியான வைப்புகள் தொடர்பாக நி.ஒ. 571 பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை | பொது வைப்புக் கணக்கின் கீழான காலாவதியான வைப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. |

| கணக்கு இலக்கம் | வைப்பு செய்யப்பட்ட வருடம் | இலக்கம் | தொகை (ரூபா) | தற்போதைய நிலவரம் |
|---|---|---|---|---|
| 6000-0-0-2-0-52 | 2017 | GDTN 137 | 50,000.00 | Settled on 16.06.2023 |
| | 2018 | GDTN 153 | 4,000.00 | 2022.02.23 Settled on |
| | 2019 | GDTN 237 | 7,000.00 | 2023.04.25 Settled on |
| | 2019 | GDTN 239 | 52,000.00 | Not settled yet. |
| | 2019 | GDTN 250 | 30,000.00 | Not settled yet. |
| 6000-0-0-16-0-4 | 2018 | GDRN 1145 | 142,309.00 | Settled on 20.04.2023 |
| | 2018 | GDRN 1151 | 7,999.00 | Settled on 23.05.2022 |
| | 2018 | GDRN 1153 | 54,185.00 | Settled on 23.02.2022 |
| | 2019 | GDRN 1156 | 284,342.00 | Settled on 22.03.2022 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2019 | GDRN 1157 | 890,586.00 | Settled on 03.06.2022 |
| | | | 2019 | GDRN 1158 | 1,246,654.00 | Settled on 29.12.2022 |
| | | | 2019 | GDRN 1159 | 1 ,849,159.00 | Settled on 29.12.2022 |
| | | | 2019 | GDRN 1160 | 2,440,576.00 | Settled on 29.12.2022 |
| | | | 2019 | GDRN 1163 | 40,061.00 | Settled on 02.03.2022 |
| | | | 2019 | GDRN 1164 | 2,440,576.00 | Settled on 29.12.2022 |
| | | | 2019 | GDRN 1165 | 2,440,576.00 | Settled on 29.12.2022 |
| | | | 2019 | GDRN 1166 | 123,483.00 | Settled on 20.04.2023 |
| | | | 2019 | GDRN 1170 | 19,425.00 | Settled on 23.02.2022 |
| | | | 2019 | GDRN 1172 | 2,440,576.00 | Settled on 30.12.2022 |
| | | | மொத்த மீதி | | 14,563,507.00 | |
| 15 | நி.ஒ. 371 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்திற்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை | அப்போது காணப்பட்ட கோவிட் 19 காரணமாக பணியாட்கள் கடமைக்கு வருகை தராததன் காரணமாக அலுவலக பணிகள் நிறுத்தப்பட்டிருந்த போது ஏற்பட்டது. 2022 ஆம் ஆண்டு முதல் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | | | | |

பாராளுமன்ற தொடர் இல. : - 290

நிறுவனத்தின் பெயர் :- உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

பகுதி II :- 76.00

| தொடர் இலக்கம் | அறிக்கையில் குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| 1 | நிறுவனத்தின் பிரசைகள்/ சேவைபெறுநர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்பதற்குமான முறையொன்று தயாரிக்கப்படவில்லை. | நிறுவனத்தின பிரசைகள்/ சேவைபெறுநர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 2 | ஒட்டுமொத்த பணியாட்தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு கைச்சாத்திட்டிருக்கப்படவில்லை. | இது தொடர்பில் குழுக்கள் நியமிக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றதும், இந்த வருடத்தின் அனைத்து பணியாட்தொகுதியையும் உள்ளடக்கிய செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்படும். |
| 3 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்புகளின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே இருந்தது | 75% நிறைவடைந்துள்ளது. |
| 4 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது. | நிறுவனத்தின் கணக்குகளின் கணக்காய்வு அபிப்பிராயம் திருப்தியளிப்பதாக காணப்பட்டுள்ளதுடன் ஏற்படுத்திய விடயங்களை திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| 5 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டன. கோவிட் பெருநோய் தொற்றுக்கு ஏற்புடைய நிதி ஆண்டில் சேலை நாட்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தினால், சில பரிந்துரைகளை செயல்படுத்துவதில் தாமதங்கள் காணப்பட்ட போதிலும், நாட்டின் நிலவரம் முன்னேற்றம் அடைந்தவுடன் ஏற்புடைய பரிந்துரைகள் முறையாக அமுல்படுத்தப்பட்டன. |
| 6 | பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகள்/கட்டளைகள் செயல்படுத்தப்படவில்லை | பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகள் /கட்டளைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கோவிட் பெருநோய் தொற்றுக்கு ஏற்புடைய நிதி ஆண்டில் சேலை நாட்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தினால், சில பரிந்துரைகளை செயல்படுத்துவதில் தாமதங்கள் காணப்பட்ட போதிலும், நாட்டின் நிலவரம் முன்னேற்றம் |

| | | |
|---|---|---|
| | | அடைந்தவுடன் ஏற்புடைய பரிந்துரைகள் முறையாக அமுல்படுத்தப்பட்டன. |

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. *290* இற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.**

**ஒப்பம்**
**பணிப்பாளர் நாயகம்**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

திணைக்களத்தின் பெயர் : இலங்கை மதுவரித் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 290

நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

| | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை / தற்போதைய நிலைமையை சீர்செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். |
|---|---|---|
| 01 | நிலையான சொத்து பதிவேடு இன்றுவரை பராமரிக்கப்படவில்லை | தற்போது புதுப்பித்த நிலையில் பராமரிக்கப்படுகிறது. |
| 02 | நஷ்ட ஈடு பதிவேடு இன்றுவரை பராமரிக்கப்படவில்லை<br>உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை | சேத இழப்பு பதிவேடு புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. |
| 03 | உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்கள் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்போது, ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படும். உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு, தலைமை அலுவலக பிரிவுகளிலிருந்து ஒரு மாதத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன, மேலும் கிளை அலுவலகங்களிலிருந்து பதிலளிப்பதில் சில தாமதங்கள் இருந்த போதிலும், 14 நாட்களுக்குள் உள் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளிக்குமாறு திணைக்களத்தின் பிராந்திய அலுவலக தலைவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| 04 | அனைத்து வாகனங்களிலும் அரசு சின்னம் பொறிக்கப்படவில்லை. | மதுவரித் திணைக்களத்தின் பெரும்பாலான வாகனங்கள் பறிமுதல் பணிகளுக்காக ஒதுக்கப்படுவதால், அரச அடையாளம் மறைக்கப்பட வேண்டும். |
| 05 | வாகன விபத்துக்கள் தொடர்பாக, நி.ஒ 103, 104, 109 மற்றும் 110 ஆகியவற்றின் அடிப்படையில் சரியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நி.ஒ இன் அறிவுறுத்தலின் பிரகாரம் திணைக்கள வாகன விபத்துக்கள் தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நி.ஒ இன் அறிவுறுத்தலின் பிரகாரம் இதுவரை அப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |
| 06 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு சீராக்கப்பட்டிருக்க வேண்டிய மீதிகள் நி.ஒ இன் அறிக்கையின் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படவில்லை. | அது இப்போது தீர்க்கப்பட்டுவிட்டது. |

| | | |
|---|---|---|
| 07 | ஒரு வருடத்திற்கும் மேலாக கடன் நிலுவைகள் இருந்தன | **<u>உயிரிழந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள்</u>** |

| குறியீட்டு எண் | பெயர் மற்றும் அலுவலர்களின் பதவி | கடன் வகை | 31.03.2023 அன்றைய மீதி (ரூபா) | அலுவலரின் தற்போதைய மொத்த மீதி | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 01. | ஆர்.தினேஷ் மதுவரி காவலர் | அனர்த்தம்/ பண்டிகை | 234,360.00<br>3,750.00 | 238,110.00<br>3750.00 | * 2021.06.29 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் புகையிரத திணைக்களத்தின் போக்குவரத்து அத்தியட்சகருக்கு (அனுராதபுரம்) பிணையாளரின் சம்பளத்தில் இருந்து பெற்று அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 02.12.2021 திகதியிட்ட நினைவூட்டல் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.<br>* இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று போக்குவரத்து அத்தியட்சகர் (அனுராதபுரம்) 2021.12.25 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவித்தார்.<br>* தற்போதைய நிலைமை குறித்து விசாரித்து 20.04.2022 திகதியிட்ட கடிதம் போக்குவரத்து அத்தியட்சகருக்கு (அனுராதபுரம்) அனுப்பப்பட்டுள்ளது, மேலும் பதில் எதுவும் இல்லாததால், இந்த விடயம் குறித்து பொதுக் கணக்குக் குழுவின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், பிணையாளரின் சம்பளத்திலிருந்து வசூலிப்பதற்கு 26.09.2022 திகதியிட்ட கடிதம் பொது முகாமையாளருக்கு அனுப்பப்பட்டது.<br>* பதிலளிக்கப்படாததால் 30.12.2022 திகதியிட்ட நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டது,<br>* உத்தரவாததாரரால் கையொப்பமிடப்பட்ட உத்தரவாதம் தொடர்பாக நிறுவனங்களின் குறியீடு 3:17 மற்றும் அத்தியாயம் XXIV இல் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>புகையிரத பொது முகாமையாளர் 14.02.2023 திகதியிட்ட தனது கடிதத்தில், முன்மொழியப்பட்ட பிணையாளர் பிரகடனம் பிரிவு 3:17:1 க்கு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முரணானது மற்றும் முறையாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் சான்றளிக்கப்படவில்லை என்பதால் சரியான சான்றிதழ் அல்ல என்று தெரிவித்துள்ளார்.<br>* கடன் நிலுவையை தள்ளுபடி செய்வது பொருத்தமானது என்று பரிந்துரை செய்து 27.03.2023 திகதியிடப்பட்ட கடிதம் நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது,<br>மேலும், நிதி அமைச்சின் செயலாளரின் 21.04.2023 திகதியிடப்பட்ட கடிதத்தின் படி, நிலுவையில் உள்ள கடன் நிலுவையை வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எழுத்து மூலமான சான்றுகள் அடங்கிய கோப்பு 2023.05.16 ஆம் திகதி நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.<br>* நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, உத்தரவாதம் அளிப்பவரின் சம்பளத்திலிருந்தும் கடனை அங்கீகரித்த அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் கடனை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br>* காணாமல் போன தனிநபர் கோப்புகள் மற்றும் கடன் கோப்புகள் குறித்து விசாரிக்க 23.01.2024 அன்று நியமிக்கப்பட்ட குழுவுக்கு இந்த கடன்களை வசூலிப்பது தொடர்பான பரிந்துரைகளை வழங்குமாறு கூறப்பட்டுள்ளது. |
| | | .02 | எஸ்.என்.சி.ட பிள்யூ.எம்.டி . பிரதீப் மதுவரி காவலர் | அனர்த்தம் | 113,640.00 | 113,640.00 | *ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br>* அலுவலரின் குடும்ப விவரங்களைக் கொண்டு வர சார்ந்தவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. |
| | | .03 | கே.எஸ்..உத்பலவன்ன மதுவரி காவலர் சாரதி | அனர்த்தம் | 122,156.00 | 122,156.00 | * இறப்பு பணிக்கொடை வழங்குவதற்காக தொடர்புடைய ஆவணங்கள் 16.09.2022 அன்று ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | .04 | ஜெ.எம்.எஸ் ஜெயவீர மதுவரி காவலர் | அனர்த்தம் | 85,100.00 | 85,100.00 | * ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br>* குறித்த உத்தியோகத்தர் நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதத்தில் இடம்பெறாததால், சம்பந்தப்பட்ட திணைக்களங்களிலிருந்து தொடர்புடைய ஆவணங்களைக் கொண்டுவருமாறு கடிதங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. |
| | | .05 | ஆர். ஜி. எஸ்.ஜெயனித்தி மதுவரி காவலர் சாரதி | அனர்த்தம் | 153,400.00 | 153,400.00 | * இறப்பு பணிக்கொடை வழங்குவதற்காக தொடர்புடைய ஆவணங்கள் 12.09.2022 அன்று ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |
| | | .06 | எம்.ஜெ.ஹெட்டியாராச்சி மதுவரி பரிசோதகர் | அனர்த்தம் | 58,800.00 | 58,800.00 | * இறப்பு பணிக்கொடை வழங்குவதற்காக தொடர்புடைய ஆவணங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு 09.11.2022 அன்று அனுப்பப்பட்டன. |
| | | .07 | எம்.ஜி.ஆர்.சி. ஜயவர்தன மதுவரி பரிசோதகர் | அனர்த்தம் | 111,100.00 | 111,100.00 | இறப்பு பணிக்கொடை வசூலிக்கப்படும். |
| | | .08 | ஐ.எஸ்.விக்ரமரத்ன மதுவரி காவலர் | அனர்த்தம் | 138,112.00 | 138,112.00 | இறப்பு பணிக்கொடை வசூலிக்கப்படும் |
| | | .09 | ரி.தேவமயூரன் மதுவரி கோப்ரல் | அனர்த்தம் | 47,540.00 | 540.00,47 | இறப்பு பணிக்கொடை வசூலிக்கப்படும் |
| | | | மொத்தம் | | 1067958.00 | 958.0,067,10 | |

**ஓய்வு பெற்ற அலுவலர்கள் தொடர்பான விபரங்கள்**

| குறியீட்டு எண் | உத்தியோகத்தரின் பெயர் | கடன் வகை | 31.03.2023 அன்றைய மீதி (ரூ.) | அலுவலரின் தற்போதைய மொத்த மீதி | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| .01 | ஜி.ஏ.ஜி.சி.பெரரா | அனர்த்தம் | 28,208.00 | 28,208.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .02 | எல்.எ சந்திரசிறி | அனர்த்தம் | 78,500.00 | 78,500.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .03 | எச்.எஸ்.விஜேசிங்க | அனர்த்தம் | 65,000.00 | 65,000.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04. | எல்.எ.டி. வீரசிறி | அனர்த்தம் | 57,396.00 | 57,396.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 05. | என்.டி.யு குணசேகர | அனர்த்தம் | 22,493.00 | 22,493.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 06. | கே.டி.சுஷினிதா | அனர்த்தம் | 51,060.00 | 51,060.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07. | எச்.கே.ஆர்.கே .குமாரநாயக்க | அனர்த்தம் | 75,082.00 | 75,082.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 08. | W.A.M.J. பெரேரா | அனர்த்தம் | 64,980.00 | 64,980.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 09. | பி.சிரிபவன் | அனர்த்தம் | 97,067.00 | 97,067.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 10. | எச்.எ.வி மல்லிமராச்சி | அனர்த்தம் | 64,340.00 | 64,340.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .11 | எச்.எம்.எஸ்.எஸ்.ஹென்னநாயக்க | அனர்த்தம் | 139,996.00 | 139,996.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .12 | பி.பி.பி.எம்.அபேரத்ன | அனர்த்தம் | 93,039.00 | 93,039.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .13 | கே.எச்.அபேரத்ன | அனர்த்தம் | 129,180.00 | 129,180.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| .14 | எம்.ஏ.ஒய்.ரஞ்சனி | அனர்த்தம் | 56,000.00 | 56,000.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .15 | எச்.எம்.கே.ஹேமலதா | அனர்த்தம் | 220,103.00 | 220,103.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .16 | பி.ரவிச்சந்திரா | அனர்த்தம் | 56,677.46 | 56,677.46 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .17 | ஆர்.எம்.பி.ரணசிங்க | அனர்த்தம் | 143,200.00 | 143,200.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .18 | எச்.ஏ.டி.தயாரத்ன | அனர்த்தம் | 148,885.00 | 148,885.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| .19 | யு.டி.என்.பந்துல | அனர்த்தம் | 118,787.00 | 118,787.00 | * ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| | **மொத்தம்** | | *4.1,709,9936* | *1,709,993.46* | |

**இடைநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகளின் விபரங்கள்**

| குறியீட்டு எண் | உத்தியோகத்தரின் பெயர் | கடன் வகை | 31.03.2023 அன்றைய மீதி (ரூ.) | அலுவலரின் தற்போதைய மொத்த மீதி | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| .01 | எம்.பி.என்.எஸ். எஸ். குமார மதுவரி காவலர் | அனர்த்தம் | 4000.00 | 4000.00 | * கடன் தொகையை செலுத்த 31.08.2019 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.<br>* 20.05.2021 மற்றும் 02.12.2021 திகதியிடப்பட்ட நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டுள்ளன.<br>*இதுவரை பதில் இல்லை.<br>*2023.02.22 மூன்றாவது நினைவூட்டல் அனுப்பப்பட்டது.<br>*கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | * 2023.10.23 ஆம் திகதி மேற்படி கடிதம் மீண்டும் கிடைக்கப்பெற்றதுடன் 17.11.2023 அன்று வதிவிடத்தை உறுதி செய்வதற்கு கடிதங்கள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. |
| | | .02 | டபிள்யு.ஆர்.இந்திரஜித் மதுவரி காவலர் | அனர்த்தம் | 136,202.25 | 136,202.25 | * இலஞ்ச குற்றச்சாட்டில் 2086/15 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br>* கடன் தொகையை செலுத்த 31.08.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது மற்றும் 20.05.2021 அன்று நினைவூட்டல் அனுப்பப்பட்டது.<br>* பூகொட மதுவரி நிலைய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் பூகொட மதுவரி நிலைய உத்தியோகத்தர் குறித்த முகவரியில் வசிப்பதாக அறிவித்துள்ளார்.<br>* தீர்ப்பின்படி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>*இரண்டாவது நினைவூட்டல் 22.02.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>*அதற்கு மறுமொழி இல்லை. |
| | | .03 | S.S.P.D. விஜேரத்ன மதுவரி காவலர் | அனர்த்தம் | 100,287.67 | 100,287.67 | * இலஞ்ச குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 2136/16 என்ற இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையில் உள்ளது.<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்த 22.02.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>*அதற்கு மறுமொழி இல்லை. |
| | | 04. | K.P.L.R.D.சமரவீர மதுவரி காவலர் | அனர்த்தம் | 165,620.00 | 165,620.00 | * 2086/2015 இலக்கத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | * கடன் தொகையை செலுத்த 22.02.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>*அதற்கு மறுமொழி இல்லை. |
| 05. | H.K.T.M.S. பண்டார மதுவரி காவலர் | அனர்த்தம் | 37,390.00 | 37,390.00 | * இலஞ்ச குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் B/2162/16 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.<br>* அதன் முடிவுகளின்படி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்தவும், பணிக்கு திரும்பிய பிறகு வசூலிக்க ஏற்பாடு செய்யவும் 02.10.2019 திகதியிடப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>*அதற்கு மறுமொழி இல்லை. |
| 06. | எஸ்.எம்.ஆர்.ஜி. ரி.குமார மதுவரி காவலர் | அனர்த்தம் | 139,251.00 | 139,251.00 | * இலஞ்ச குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் B/2162/16 இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.<br>* அதன் முடிவுகளின்படி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்துமாறு 31.08.2019 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டது மற்றும் 20.05.2021 மற்றும் 2021.12.02 ஆகிய திகதிகளில் நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டன.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>* 03.11.2023 அன்று மேற்படி கடிதம் மீண்டும் கிடைக்கப்பெற்று 17.11.2023 அன்று, வசிப்பிடத்தை உறுதிப்படுத்த அலவ்வ பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன<br>* இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 07. | S.B.பிரியதர்ஷன மதுவரி காவலர் | அனர்த்தம் | 49,531.00 | 49,531.00 | * இலஞ்ச குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் 131/2021 இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் உள்ளது.<br>* அதன் முடிவின்படி, ஊக்குவிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>* கடன் தொகையை செலுத்துமாறு 31.08.2019 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டது மற்றும் 20.05.2021 மற்றும் 2021.12.02 ஆகிய திகதிகளில் நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டன.<br>*கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>* 02.11.2023 அன்று மேற்கண்ட கடிதம் மீண்டும் பெறப்பட்டது, 17.11.2023 அன்று வதிவிடத்தை உறுதிப்படுத்த இரத்தினபுரி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.<br>* இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. |
| | | 08. | R.P.D.A சேனாரத்ன மதுவரி பரிசோதகர் | அனர்த்தம் | 155,691.00 | 155,691.00 | * இலஞ்ச குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் B/54/2020 என்ற இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்த 02.12.2021 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.<br>* பணம் செலுத்த இயலாததால், 13.12.2021 திகதியிடப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. 2023.10.17 ஆம் திகதி, மதுவரி ஆணையாளர் நாயகம் 12<br>தவணைகளில் செலுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார். 15.12.2023 முதல் தலா ரூ. 12,974.25 செலுத்தப்படும் என்று 07.11.2023 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இதுவரை எந்த கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 09 | கே.ரி.எச்.ஹெட்டிவத்த மதுவரி காவலர் | அனர்த்தம் | 222,860.00 | 222,860.00 | * இலஞ்ச குற்றச்சாட்டு தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் B/54/2020 என்ற இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்துமாறு 02.12.2021 திகதியிடப்பட்ட கடிதத்தில் அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>* 15.12.2021 திகதியிடப்பட்ட கடிதம் பணம் செலுத்த முடியாததால் சலுகை படிவத்தை தயாரிக்குமாறு அனுப்பப்பட்டுள்ளது. 2023.10.17 ஆம் திகதி மதுவரி ஆணையாளர் நாயகம் 12<br>தவணைகளில் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார். 15.12.2023 முதல் தலா ரூ. 18,571.67 செலுத்தப்படும் என்று 07.11.2023 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>* செலுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் அரை சம்பளம் வழங்குமாறு கோரி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| | | 10. | ஜி.எச்.எல்.லசந்த மதுவரி சாரதி | அனர்த்தம் | 142.930.00 | 142,930.00 | * இலஞ்ச குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் B/54/2020 என்ற இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் உள்ளது.<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்த 02.12.2021 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.<br>* பணம் செலுத்த இயலாததால், சலுகை படிவத்தை தயார் செய்யக் கோரி 13.12.2021 திகதியிடப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br>2023.10.17 ஆம் திகதி மதுவரி ஆணையாளர் நாயகம் 12 தவணைகளில் செலுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளார். 15.12.2023 முதல் தலா ரூ. 11,910.84 செலுத்தப்படும் என்று 07.11.2023 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>* இதுவரை பணம் வழங்கப்படவில்லை. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 11. | பி.டபிள்யூ.பி.ம ஞ்சுளா மதுவரி பரிசோதகர் | அனர்த்த ம் | 7,490.00 | 7,490.00 | * இலஞ்ச குற்றச்சாட்டு தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் HCB/112/2021 என்ற இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்த 22.02.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>*அதற்கு மறுமொழி இல்லை. |
| | | .12 | A.W.புத்திலங்கா மதுவரி சார்ஜன்ட் | அனர்த்த ம் | 183,198.00 | 127,891.00 | இலஞ்ச குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றில் HCB/112/2021 இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்த 22.02.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.<br>* செலுத்த வேண்டிய குற்றவியல் அறிக்கை வெகுமதித் தொகையிலிருந்து ரூ 55,307.00 மீட்கப்பட்டுள்ளது.<br>*11.03.2023 திகதியிடப்பட்ட கடிதத்தில், மறு வேலைக்குப் பிறகு கடன் நிலுவைத் தொகை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>*24.10.2023 திகதியிடப்பட்ட கடிதம் கடன் நிலுவைத் தொகையை ஒரே நேரத்தில் செலுத்த முடியாது என்பதால் ஒரு மென்மையான நடவடிக்கையைப் பின்பற்றுமாறு கேட்டு அனுப்பப்பட்டுள்ளது.<br>மதுவரி ஆணையாளர் நாயகம் 10.11.2023 அன்று 12 தவணைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளார். 15.12.2023 முதல் தலா ரூ. 10,657.59 செலுத்தப்படும் என்று 15.11.2023 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>* ஒரு தவணை 01.12.2023 அன்று செலுத்தப்பட்டது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | .13 | ஏ.எச்.டப்.நிஷங்க<br>மதுவரி<br>கோபால் | அனர்த்தம்/<br>பண்டிகை | 143,344.00<br><br>1250.00 | 134,388.00 | இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றில் HCB/118/2021 இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்த 22.02.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.<br>* செலுத்த வேண்டிய குற்ற அறிக்கை வெகுமதித் தொகையிலிருந்து ரூ. 10,206.00 மீட்கப்பட்டுள்ளது.<br><br>*03.07.2023 திகதியிடப்பட்ட கடிதம் கடன் நிலுவைத் தொகையை ஒரே நேரத்தில் செலுத்த முடியாது என்பதால் ஒரு நெகிழ்வான நடவடிக்கையைப் பின்பற்றுமாறு கேட்டு அனுப்பப்பட்டுள்ளது.<br>* மதுவரி ஆணையாளர் நாயகம் 17.10.2023 அன்று 12 தவணைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளார். 15.12.2023 முதல் தலா ரூ. 11,199.00 செலுத்தப்படும் என்று 07.11.2023 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது.<br>* இரண்டாவது தவணை 03.01.2024 அன்று செலுத்தப்பட்டது |
| | | .14 | ஜெ.பி.சி.பட்டு விட்டாராச்சி | அனர்த்தம் | 22,047.00 | 22,047.00 | இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றில் HCB/118/2021 இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* கடன் தொகையை செலுத்த 22.02.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>*அதற்கு மறுமொழி இல்லை. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | .15 | எஸ்.ஏ.சி.சந்திரசேகர<br>மதுவரி காவலர் | அனர்த்தம் | 201,139.00 | 159,619.00 | இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேல் நீதிமன்றில் HCB/118/2021 இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது<br>* அதன் முடிவுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>* செலுத்த வேண்டிய குற்றவியல் அறிக்கை வெகுமதித் தொகையிலிருந்து ரூபா 41,520.00 அறவிடப்பட்டுள்ளது.<br>* கடன் தொகையை செலுத்த 22.02.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.<br>* கடைசி நினைவூட்டல் 10.10.2023 அன்று அனுப்பப்பட்டது.<br>* 12.10.2023 திகதியிடப்பட்ட கடிதத்தில், பணம் செலுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| | | .16 | ஜி.என்.வி.டி.கே. ரத்னாயக்க | அனர்த்தம் | 121,560.00 | | 26.06.2023 அன்று மீண்டும் வேலைவாய்ப்பு. கடன் நிலுவைத் தொகை வசூலிக்கப்படுகிறது. |
| 08 | பொது வைப்புக் கணக்கில் நிலுவையில் உள்ள வைப்புகள் நி.ஒ 571 இன் அடிப்படையில் கையாளப்படவில்லை | இது நி.ஒ .571 இன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | | | | | |
| 09 | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில், காசேட்டின் மீதி உரிய சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைய உரிய திகதியில் திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.<br>வசூலிக்கப்பட்ட வருமானம் உரிய விதிகளின்படி திருப்பித் தரப்படவில்லை. | அது தற்போது உரிய திகதியில் அனுப்பப்பட்டுள்ளது. | | | | | |
| 10. | நிறுவனம் பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக இணையத்தளமொன்று உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. | இத்திணைக்களத்திற்கென இணையதளம் ஒன்று உள்ளது<br>https://www.excise.gov.lk | | | | | |

| | | |
|---|---|---|
| 11. | நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையதளம் பொதுமக்களுக்கு முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுகளையோ சமர்ப்பிக்க சந்தர்ப்பமளிக்கவில்லை . | திணைக்களத்தின இணையத்தளம் பொதுமக்களுக்கு புகார்கள் அல்லது பாராட்டுக்களை சமர்ப்பிக்க ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கின்றது . "புகார் செய்ய" (இணைப்பு 01) |
| 12 | குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனம் சரியாக தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படவில்லை.<br>நிறுவனத்தின் குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனத்தின் அமலாக்கத்தை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் ஒரு அமைப்பை நிறுவனம் தயாரிக்கவில்லை. | குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டு வருகிறது மற்றும் இது எதிர்காலத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |
| 13 | வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் 50% க்கும் குறைவாகவே இருந்தது. | கொவிட் 19 நோய்த்தொற்று காரணமாக 2021 ஆம் ஆண்டு பயிற்சிகள் செயல் திட்டத்தின்படி நடைபெற முடியாத நிலையில் இருந்தன. ஆனால் அந்த காலகட்டத்தில், சாலை அமைப்புக்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.<br><br>2023 ஆம் ஆண்டின் இறுதியில், திட்டமிட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 100%வீதத்தை தாண்டியுள்ளது. |
| 14 | நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியற்றது அல்லது மோசமானது. | தற்போது நிறுவனத்தின் கணக்குகளை திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 290 இற்காக இலங்கை மதுவரித் திணைக்களம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
மதுவரி ஆணையாளர் நாயகம்
இலங்கை மதுவரித் திணைக்களம்

திணைக்களத்தின் பெயர் : அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 290

நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்.

| | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுளை சரிசெய்வதற்காக நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள்/தற்போதைய நிலையை |
|---|---|---|
| முதலாம் பாகம் : 68.00 | | |
| 1 | நிலையான சொத்துக்கள் பதிவேடு கால அடிப்டையில் பராமரிக்கப்பட வில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| 2 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அனுப்பப்படவில்லை | சுங்கத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு இறுதிப் பதில் தயாரிக்கப்படுவதால் சற்று கால தாமதம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. எதிர்காலத்தில் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 3 | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அனுப்பப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்களை சமர்ப்பிக்குமாறு திணைக்களத்தின் அனைத்து பணிப்பகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 4 | 2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க, சொத்துக்களுக்கான முகமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் விற்றொழித்தல்கள் பற்றிய தகவல்கள் கொம்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை | இலங்கை சுங்கத்தின் வாகனங்கள்அனைத்தினதும் தகவல்கள்கொம்ட்ரோலர் நாயக அலுவலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட NFAMSதரவு அமைப்பில்உள்வழிப்படுத்தப்பட்டு, CGO/NFAMS/V/02 என்ற படிவத்தின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. |
| 5 | 2017.06.26 ஆம் திகதிய, 1/2017 ஆம் இலக்க, சொத்துக்களுக்கான முகமைத்துவ சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம், ஏற்பாடுகள் நடைமுறைப்பபடுத்தப்படுதல் இணைப்பாக்கம் செய்யப்படுவதற்காகபொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துகொம்ட்ரோலர்நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்காமை | கொம்ட்ரோலர்நாயகஅலுவலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட NFAMSதரவு அமைப்பில் இலங்கை சுங்கத்தின் அனைத்து வாகனங்களையும் உள்ளடக்குவதற்காக தரவு உள்வழிப்படுத்தல் மற்றும் இணைபாக்க உத்தயோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 6 | 2020.02.28 ஆம் திகதிய, 01/2020 ஆம் இலக்க, அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ. 756(6) இன் பிரகாரம்பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை | கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட கொரோனா நோய்த் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால்,சுங்கத் திணைக்களத்தில் வருடாந்த பொருள் இறுப்புக் கணிப்பாய்வு குறிப்பிட்ட காலத்தினுள் மேற்கொள்ளமுடியாமற்போயுள்ளது.யாழ்ப்பாணம், திருகோணமலை, |

| | | |
|---|---|---|
| | | அம்பாந்தோட்டை,காலி,நீர்கொழும்பு போன்ற பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள சுங்கத்தின் பிராந்திய அலுவலகங்களில் பொருள் இறுப்புக் கணிப்பாய்வு பணியை மேற்கொள்வதற்கும்,மேலும் அந்த பொருள் இறுப்புக் கணிப்பாய்வு அறிக்கைகளின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் கணிசமானளவு காலம் எடுப்பதனால், எதிர்காலத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற பொருள் இறுப்புக் கணிப்பாய்வினை உரிய காலத்தில் நிறைவுசெய்து , உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 7 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க,பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனைமேற்கொள்ளப்படாமை | எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட விநியோக முறை நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக109 வாகனங்களின் எரிபொருள் தகனம் பற்றிய சோதனையினை மேற்கொள்வது சிரமமானதொரு விடயமாக காணப்பட்டது. எரிபொருள் கோட்டா முறையானது 2023 செத்தெம்பர் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக இதுவரை பல வாகனங்களில் எரிபொருள் தகன சோதனை மேற்கொள்ளப்பட்டுளது. |
| 8 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டு வந்த செயற்படாத வங்கி கணக்குகள் தீர்க்கப்படவில்லை | செயற்படாத வங்கி கணக்குகள் காணப்படுவதில்லை |
| 9 | வங்கிக் இணக்க கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்ட, சீராக்கல்செய்யப்படவேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின் படி செயலாற்றி, குறித்த மீதிகள் ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை | வங்கிக் இணக்க கூற்றுகளில்வெளிப்படுத்தப்பட்ட சீராக்கல் செய்யப்பட்டவேண்டிய மீதிகள் தீர்க்கப்பட்டுள்ளன. |
| 10 | நி.ஒ. 94(1) இன்படி செலவு விடயமொன்று க்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பனை விஞ்சாதபடிபொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தது. | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் வரம்பனை விஞ்சிய எந்தப் பொறுப்புக்களும் ஏற்கப்பட்டிருக்க வில்லை. |
| 11 | ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை | இடமாற்றம், மரணம், ஓய்வு பெறல், பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஒரு வருடத்திற்கு மேற்பட்ட 56அலுவலர்களிடமிருந்து அறவிடப்படவேண்டி இருந்த, ரூபா4,215,575.81 தொகையில், 20 அலுவலர்களின் கடன் நிலுவைத் தொகையான ரூ.499,215.01 ஆனது அறவிடப்பட்டு, நி.ஒ.113 இன் பிரகாரம், பதிவழிப்புச்செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 36 |

| | | |
|---|---|---|
| | | அலுவலர்களின் கடன் நிலுவை தொகையான ரூ.3,716,360.80 இனை அறவீடுசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 12 | காலாவதியான வைப்புக்கள்தொடர்பாக நி.ஒ. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.ஒ.571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது. |
| 13 | நி.ஒ.341 இன் பிரகாரம், வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை. | பணி குறித்த இடைக்கால கட்டு நிதி பெறப்பட்ட பணி முடிவடைந்தவுடன் அவற்றினைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு கோரி சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 14 | கட்டுநிதி ஒப்பீட்டுக் கூற்றுக்கு அமைய அறிக்கையில் கண்டறியப்பட்டவேறுபாடுகளை அடையாளங் கண்டு சரிசெய்வதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கட்டுநிதி ஒப்பீட்டுக் கூற்றுக்கு முறையாக ஒப்பீடுசெய்யப்பட்டுள்ளது. தீர்க்கப்படாத பணி குறித்த இடைக்கால கட்டு நிதி மீதி காணப்படுவதில்லை. |
| 15 | 1994.4.20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க, அரசாங்க கணக்குச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நிறுவனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை | 30/94 ஆம் இலக்க, அரசாங்க கணக்குச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கணக்குவைக்கப்படவேண்டிய வெளிநாட்டு மானியங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 16 | வெளிநாட்டு மானியமாக பெறப்பட்ட மொத்தப் பணமும் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் உத்தயோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படவில்லை. | வெளிநாட்டு மானியங்கள் பெறப்படாததால்,திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கிற்குஅனுப்பவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. |
| இரண்டாம் பாகம்: 65.00 | | |
| 1 | நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை | நிலபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) பற்றி இலங்கை சுங்கத் திணைக்கள அலுவலர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக 2023 ஆண்டு செத்தெம்பர் மாதம் 7 ஆம் திகதியன்று, நிலபேறான அபிவிருத்திப் பேரவையின்அலுவலர்களின பங்கேற்புடன் செயலமர்வொன்றும் நடைபெற்றது.<br><br>அதற்கிணங்க, திணைக்கள அலுவலர்கள் சுங்க நடவடிக்கைகளுக்கு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களைப் பயன்படுத்துவது பற்றிய அடிப்படை விளக்கமொன்றினைப் பெற்றுக் கொண்டதோடு,பின்வரும் சுங்க நடவடிக்கைகளுடன் தொடர்புபற்ற நிலையான அபிவிருத்தி நோக்கங்களையும்இனம் கண்டுள்ளனர்.<br><br>1. சுங்க அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வருமான சேகரிப்பு மற்றும் வர்த்தகத்திற்கு வசதியளித்தல் செயற்பாடுகள் மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகள் உள்ளடங்கலாக தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
